ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு (மத நல்லிணக்கம், மார்க்க சுதந்திரம்......) பக்கம் 3

இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) தொடர்-9 பக்கம் 8

பராஹீனே அஹ்மதிய்யா (தொடர்-9) பக்கம் 12

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆன்மிக நிலை பக்கம் 19

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | June 2026 | Vol. 5 - Issue No. 7

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311





# திருக்குர்ஆன்

وَاِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيۡمٍ

நிச்சயமாக நீர் மிகவும் உயர்வான நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளீர். (68:5)



# ஹதீஸ்

وَعَنْ جابِرٌ أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قال: «إِنَّ اللَّهَ بَعَثَنِي لِتَمَامِ مَكَارِمِ الْأَخْلَاقِ وَكَمَالِ محَاسِنِ الْأَفْعَال» .

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நற்பண்புகளை முழுமை செய்வதற்காகவும் நற்செயல்களை முழுமைப்படுத்துவதற்காகவுமே நான் அனுப்பப்பட்டுள்ளேன்.


(மிஷ்காத் எண் 5770)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

## (மத நல்லிணக்கம், மார்க்க சுதந்திரம் குறித்து நபி (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் முன்மாதிரி)

மதிப்பிற்குரிய முஹம்மத் இனாம் கவ்ரி சாஹிப் (நாஸிர் ஆலா)

தமிழாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்



لَآ اِكْرَاهَ فِي الدِّيْنِ ۙ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَيِّ ۚ

மார்க்கத்தில் எவ்வித கட்டாயமும் (ஆகுமானது) இல்லை. (ஏனென்றால்) நிச்சயமாக நேர்வழிக்கும் தவறான வழிக்கும் இடையிலுள்ள வேறுபாடு, மிகத் தெளிவாகி விட்டது. (2:257 )

وَقُلِ الْحَقُّ مِنْ رَّبِّكُمْ ۗ فَمَنْ شَآءَ فَلْيُؤْمِنْ وَّمَنْ شَآءَ فَلْيَكْفُرْ ۙ

நீர் கூறுக: இந்த உண்மை உங்கள் இறைவனிடம் இருந்து உள்ளதாகும். எனவே எவர் விரும்புகிறாரோ அவர் நம்பட்டும். எவர் விரும்புகிறாரோ அவர் நிராகரிக்கட்டும். (18:30)

قُوْلُوْٓا اٰمَنَّا بِاللّٰهِ وَمَآ اُنْزِلَ اِلَيْنَا وَمَآ اُنْزِلَ اِلٰٓى اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَالْاَسْبَاطِ وَمَآ اُوْتِيَ مُوْسٰى وَعِيْسٰى وَمَآ اُوْتِيَ النَّبِيُّوْنَ مِنْ رَّبِّهِمْ ۚ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ ۖ وَنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ

(முஸ்லிம்களே) நாங்கள் அல்லாஹ்விடத்திலும், எங்களுக்கு இறக்கப்பட்டதிலும், இப்ராஹீம் இஸ்மாயீல் இஸ்ஹாக் ஆகியோருக்கும் யஃகூபுக்கும் (அவருடைய) மக்களுக்கும் இறக்கப்பட்டதிலும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் வழங்கப்பட்டதிலும், (இவ்வாறே ஏனைய) நபிமார்களுக்கு அவர்களின் இறைவனிடமிருந்து வழங்கப்பட்டதிலும் (அனைத்து வஹியிலும்) நம்பிக்கை கொண்டுள்ளோம். நாங்கள் அவர்களுள் வேற்றுமை பாராட்டுவதில்லை. நாங்கள் அவனுக்கே கட்டுப்பட்டவர்கள் ஆவோம் என்றும் நீங்கள் கூறுங்கள். (2:137)

மத நல்லிணக்கம் மற்றும் சிந்தனை சுதந்திரம் குறித்து திருக்குர்ஆன் எண்ணற்ற இடங்களில் எப்படிப்பட்ட அடிப்படை உண்மைகளையும் கட்டளைகளையும் பிறப்பித்துள்ளது என்றால் அதை கருத்தில் கொண்டு அதன்படி செயல்பட்டால் இன்றைய நாட்களில் மார்க்கத்தின் பெயரால் நடக்கின்ற சண்டை சச்சரவுகள் கொலை குற்றங்கள் ஆகியவற்றை தடுத்து நிறுத்த முடியும். ஆனால் அதற்கான நிபந்தனை என்னவென்றால் இந்த அமைதியை வழங்கக்கூடிய மற்றும் சமாதானத்தை விரும்பக்கூடிய போதனைகளை அரசியல் இலாபத்திலிருந்து முற்றிலுமாக விலக்கி வைக்க வேண்டும்.

இங்கு மார்க்கம் என்பது ஏதோ ஓர் அரசியல் அமைப்போ, சமுதாயமோ அல்லது ஒரு நாட்டின் பெயரோ அல்ல. இந்த அடிப்படை விஷயத்தைப் புரிந்தவாறு மார்க்கத்தின் உண்மைத்துவம் என்பது மனிதனின் ஆன்மிக, பௌதிக மற்றும் நல்லொழுக்க நிலைமைகளை சீராக்குகிறது என்று நினைவில் கொள்வதற்கான தேவையும் உள்ளது. மேலும் தன்னுடைய உண்மையான படைப்பாளனுடனான உண்மையான மற்றும் வலுவான தொடர்பை நிலைநாட்டு -வதற்கான வழியையும் அது காட்டுகிறது. இந்த நோக்கத்திற் -காகவே அனைத்து உலகங்களையும் பரிபாலிக்கின்ற இறைவன் ஒவ்வொரு நாடு மற்றும் சமுதாயத்திலும் தன்னுடைய வழிகாட்டி மற்றும் தூதரை அனுப்பியுள்ளான். அவன் இவ்வாறு கூறுகின்றான்:

وَلِكُلِّ اُمَّةٍ رَّسُوْلٌ ۚ ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு தூதர் இருக்கிறார். (10:48)

وَّلِكُلِّ قَوْمٍ هَادٍ ۚ மேலும் ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் (இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட) வழிகாட்டி ஒருவர் இருக்கிறார். (13:8)

இதனால்தான் முஸ்லிம்களுக்கு நீங்கள் எங்கு ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்ட வஹீயான திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொள்கின்றீர்களோ அத்துடன் உங்கள் ஈமான் முழுமை பெறுவதற்கு அன்னாருக்கு முன்பு எந்த எந்த நபிமார்கள் மீது அல்லாஹ்வின் வஹீ மற்றும் வேதம் இறங்கியுள்ளதோ மேலும் அதனைக் கொண்டு தத்தமது காலத்தில் அந்த இல்ஹாம், வேதம் மற்றும் இறைசட்டங்களைக் கொண்டு தன்னுடைய சமுதாயத்தை சீர்திருத்தம் மற்றும் வழிநடத்தும் கடமையைச் செய்து கொண்டே இருந்தார்களோ அந்த அனைத்து நபிமார்கள் மீதும் அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்துகளின் மீதும் நம்பிக்கை கொள்ளவதும் அவசியமாகும் என்ற போதனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறு கூறுங்கள்:

لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْ رُّسُلِهٖ நாங்கள் அவனுடைய தூதர்களுள் எவருக்கிடையிலும் (எந்த) வேற்றுமை(யும்) பாராட்டுவதில்லை. அதாவது தூதுத்துவத்தின் அடிப்படையில் அனைவரும் சமமானவர்களே. ஆனால் அவர்களுடைய பொறுப்புகள், கடமைகள் பணி செய்வதற்கான வரையறைகள் உள்ளன. அது அவர்களுக்கான தகுதிக்கு ஏற்ப மாறுபடும்.

மத நல்லிணக்கம் மற்றும் சிந்தனை சுதந்திரம் குறித்து திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியில் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் மற்றும் அழகிய முன்மாதிரியின் சில உதாரணங்களை எடுத்து வைப்பேன்.

இதை நாம் வீட்டிலிருந்து துவங்குவோம். பொதுவாக மகன் மார்க்கத்திலிருந்து வெளியேறி விட்டால் பெற்றோர்கள் அவரை புறக்கணித்து விடுகிறார்கள் என்பதைக் காண முடிகிறது. சகோதரர்கள் சமூக உறவுகளையும் துண்டித்து விடுகின்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு முஸ்லிமிற்கு எவ்வாறான போதனை வழங்கப்படுகிறது என்பதைப் பாருங்கள்.

ஒரு முறை ஒரு நபர், அல்லாஹ்வின் தூதரே! எனக்கு உறவினர்கள் உள்ளனர். அவர்களிடம் நான் உறவு பாராட்டுகின்றேன். அவர்களோ என்னிடம் பகைமை பாராட்டுகின்றனர். நான் உதவி செய்கின்றேன். அவர்கள் எனக்கு தீங்கு விளைவிக்கின்றார்கள். அவர்களிடம் நான் பொறுமையை மேற்கொள்கின்றேன். அவர்கள் என்னிடம் அறிவீனத்துடன் நடந்து கொள்கின்றனர் என்றுகூறினார்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், “நீ சொல்வது போன்ற நிலையில் இருந்தால் நீ அவர்களை சூடான சாம்பலைத் திண்ணச் செய்தவன் போலாவாய். (அதாவது அவர்கள் தங்கள் மீது மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்கின்றனர்) இதே நிலையை நீ தொடர்கின்ற வரை அவர்களின் தீமையை விட்டு காப்பதற்காக ஓர் உதவியாளர் (வானவர்) உன்னுடன் இருந்து கொண்டே இருப்பார்” என்று கூறினார்கள். (முஸ்னத் அஹ்மத் 7992)

அஸ்மா பின்த் அபீபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: என்னிடம், என் தாயார் அல்லாஹ்வின் தூதருடைய காலத்தில் வந்திருந்தார்கள். அப்போது அவர்கள் இணைவைப்பவராக இருந்தார்கள். நான் அல்லாஹ்வின் தூதரிடம், “என் தாயார் என்னிடம் ஆசையுடன் வந்துள்ளார். என் தாயிடம் அவரின் உறவைப் பேணி நல்ல முறையில் நடந்து கொள்ளட்டுமா?“ என்று கூறி மார்க்கத் தீர்ப்பு கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், “ஆம். நீ உன் தாயின் உறவைப் பேணி அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்“ என்று கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி 2620).

ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் இரத்த உறவினர்களில் பெரும்பாலானவர்கள் அன்னார் தம்மை நபி என்று வாதித்ததன் காரணமாக அன்னாரை எதிர்ப்பதில் உச்சகட்ட கொடுமையை மேற்கொண்டார்கள். அவ்வாறு இருந்தும் அன்னார் இவ்வாறு கூறி வந்தார்கள். குரைஷி குலத்தின் இந்த கிளை என்னுடைய எதிரியாகி விட்டது. ஆனால் எனக்கு அவர்களுடன் ஓர் இரத்த உறவு இருக்கிறது. அந்த உறவின் காரணமாக அதன் உரிமைகளை எந்நிலையிலும் நான் பேணிக் கொண்டே இருப்பேன். எனவே அன்னாரின் ஒரு ஸஹாபி சுமாமா பின் உஸால் யமாமாவைச் சார்ந்தவர். இவர் தரப்பிலிருந்து மக்காவாசிகளுக்கு கோதுமை வந்து கொண்டிருந்தது. அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும் மக்காவாசிகள் நபி கரீம் (ஸல்) அவர்களுக்கு கொடுமைகள் இழைத்து வந்தார்கள் என்பதை அறிந்தவுடன் இன்றிலிருந்து கோதுமையின் ஒரு தானியம் கூட இங்கிருந்து மக்காவிற்கு போகாது என்று தீர்மானித்தார்கள். மேலும் அவர்கள் மக்காவாசிகளுக்கு என்னுடைய அன்பிற்குரிய நேசர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்காத வரை யமாமாவில் இருந்து கோதுமையின் ஒரு தானியம் கூட இங்கு வராது என்று கூறினார்கள். அப்போது மக்காவாசிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் வந்து நீங்கள் இரத்த உறவைப் பேணுங்கள் என்று போதனை செய்கின்றீர்கள். அவ்வாறு இருக்க யமாமாவில் இருந்து வந்து கொண்டிருந்த எங்களுடைய கோதுமையோ நின்று விட்டது. மேலும் நாங்கள் பசி, பட்டினியால் மரணிக்கின்றோம். எங்கள் மீது நீங்கள் கருணை காட்டுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். எனவே அனைத்து உலகிற்கும் அருட்கொடையாளரின் கருணையினால் மக்காவாசிகளுக்கு மீண்டும் கோதுமை வரத் துவங்கியது. (அஸ்ஸீரத்துல் நபவிய்யதுல் இப்னு ஹஷ்ஷாம்)

அதே போன்று மதீனா ஹிஜ்ரத் செய்த பிறகு மக்காவாசிகளை ஒரு கடுமையான பஞ்சம் சூழ்ந்து விட்டது. அவர்களைப் பஞ்சம் வாட்டியது. இறுதியில் அதில் அவர்கள் (பலரும்) அழிந்து போனார்கள். மேலும், பலர் செத்தவற்றை -யும் எலும்புகளையும் உண்ண வேண்டியதாயிற்று. இந்நிலையில் அபூசுஃப்யான் வந்து முஹம்மதே! நீர எங்ககளிடம் உறவுகளைப் பேணுமாறு கட்டளையிட்டபடி வந்தீர். உம் சமுதாயத்தினரோ அழிந்து கொண்டிருக்கிறார் -கள். எனவே நீங்கள் (இந்தப் பஞ்சத்தை நீக்கும்படி) அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள். மழை பொழியட்டும். மேலும்



அதன் மூலம் இந்தப் பஞ்சமும் வறுமையும் நீங்கட்டும் என்று கூறினார். இதே மக்காவாசிகள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரின் குடும்பத்தாரை மூன்று ஆண்டுகள் தொடர்ந்து அபுதாலிப் பள்ளத்தாக்கில் கைதியாக வைத்திருந்தார்கள். எதுவரை என்றால் உண்ணுகின்ற மற்றும் பருகுகின்ற பொருள்கள் கூட அன்னாருக்கு கொடுக்க விடாமல் தடுத்து வைத்திருந்தனர். இவ்வாறான கொடுமைகள் இழைத்தும் கூட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை கண்டும் காணாமல் விட்டு விட்டார்கள். மேலும் அத்தருணமே கையை உயர்த்தி துஆ செய்தார்கள். துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. நன்கு மழை பொழியத் துவங்கியது. மக்காவாசிகளின் வாழ்வில் பஞ்சம் அகன்று மீண்டும் செழிப்பான மகிழ்ச்சிக்குரிய அந்த பழைய நாட்களும் திரும்பியது. (புகாரி கிதாபுத் தஃப்ஸீர் சூரா அர்ரூம் - அத்துஹ்ஹான்)

அண்டை வீட்டாரைப் பொறுத்தவரை, நபி (ஸல்) அவர்கள் அண்டை வீட்டாரிடம், அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் சரி நல்லிணக்கத்தையும் கருணையையும் மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்கள். இது செயல்படுத்தப்பட்டால், வெறும் மத வேறுபாடுகளின் அடிப்படையில் எழுகின்ற எந்த மோதல்களும் ஒருபோதும் ஏற்படாது.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின் -றார்கள்: “அல்லாஹ்வின் மீதாணையாக! அவன் இறைநம்பிக்கையாளன் அல்லன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவன் இறைநம்பிக்கையாளன் அல்லன். அல்லாஹ்வின் மீதாணையாக அவன் இறைநம்பிக்கையாளன் அல்லன்“ என்று (மூன்று முறை) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். “அவன் யார்? இறைத்தூதர் அவர்களே!” என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் “எவனுடைய நாச வேலைகளிலிருந்து அவனுடைய அண்டை வீட்டார் பாதுகாப்பு உணர்வைப் பெறவில்லையோ அவன்தான்“ என்று பதிலளித்தார்கள். (ஸஹீஹ் புகாரி 6016)

நாம் எதிர்பாராத பல்வேறு விதமான திடீர் தாக்குதல்கள் தொடுக்கப்படுகிறது. சில நேரங்களில் இரவில், வானொலி அல்லது தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சி சத்தமாக ஒலிபரப்பப்படலாம். இது அண்டை வீட்டாரை நிம்மதியாக தூங்க விடாமல் தடுக்கிறது. சில நேரங்களில் வீட்டுக் குப்பைகள் அண்டை வீட்டாரின் வாசல் அருகே வைக்கப்படுதல் போன்றவை.

அபூதர் (ரலி) அவர்கள் கூறியதாவது: (என்னிடம்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “அபூதர்! நீர் குழம்பு சமைத்தால் அதில் அதிகமாகத் தண்ணீர் சேர்த்துக் கொள்வீராக. உம்முடைய அண்டை வீட்டாரையும் கவனித்துக் கொள்வீராக” என்று கூறினார்கள். இதன் பொருள் அண்டை வீட்டார்களுக்கும் அவ்வப்போது குழம்பைக் கொடுக்க வேண்டும் என்பதாகும். (ஸஹீஹ் முஸ்லிம் 5120)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம், “நான் நல்ல முறையிலோ அல்லது தீய முறையிலோ நடந்து கொண்டேன் என்பதை எப்படி அறிந்து கொள்வது?” என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “நீ நல்ல முறையில் நடந்து கொண்டாய் என உன்னுடைய அண்டை வீட்டார் கூறுவதை நீ செவியேற்றால் நீ நல்ல முறையில் நடந்து கொண்டவனாவாய். நீதீயுடன் நடந்து கொண்டாய் என உனது அண்டை வீட்டார் சொல்வதை நீ கேள்விப்பட்டால் நீதீயுடன் நடந்து கொண்டவனாவாய்” என்று கூறினார்கள். (இப்னு மாஜா)



பின்னர், ஒருவரின் மதத்தையோ அல்லது கொள்கையையோ பரப்புவதில் பலவந்தப்படுத்துவதையோ அல்லது போரை நடத்துவதையோ அனுமதிக்க முடியாது.

لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ மார்க்கத்தில் எவ்வித கட்டாயமும் (ஆகுமானது) இல்லை. (2:257)

‘மார்க்கத்தில் எந்த நிர்ப்பந்தமும் இல்லை’ என்ற திருக்குர்ஆனின் தெளிவான கூற்றை நான் ஆரம்பத்தில் முன் வைத்துள்ளேன். மேலும், உண்மை உங்கள் இறைவனிடம் இருந்து வந்துள்ளது. அதன் பிறகு எந்தக் கட்டாயத்திற்கும் இடமில்லை என்றும் அது அறிவித்துள்ளது. ஏனென்றால் உண்மை என்பது இதயங்களை தன் உண்மைத்துவம் மற்றும் சிறப்புத்தன்மையைக் கொண்டு ஒப்புக் கொள்ளவைப்பதாகும், இதற்கு பலவந்தம் அல்லது வன்முறையுடன் எந்தத் தொடர்பும் இல்லை. தற்போது மக்கள் தங்கள் விருப்பப்படி அதை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம்.

மற்றொரு வசனத்தில், ‘உங்களுக்கு உங்கள் மார்க்கம்; எனக்கு என் மார்க்கம்’ என்று அறிவிக்கப் -பட்டுள்ளது. அதாவது, நிராகரிப்பாளர்கள் மற்றும் இறைமறுப்பாளர்களே, உங்களுக்கு உங்கள் மார்க்கத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் உண்டு. எனக்கு என் மார்க்கத்தின் சுதந்திரம் உண்டு.” (சூரத்துல் கா.ஃபிரூன்:7)

மேற்கண்ட வசனங்கள் மார்க்க சுதந்திரத்தின் நான்கு அடிப்படை உரிமைகளை வழங்குகின்றன.

முதலாவதாக, யாரையும் தங்கள் மதத்திற்குள் கட்டாயமாகப் புகுத்த முடியாது. இரண்டாவதாக, தங்கள் சொந்த விருப்பப்படி ஒருவர் மதத்திற்குள் நுழைவதை எவராலும் வலுக்கட்டாயமாகத் தடுக்க முடியாது. மூன்றாவதாக, ஒருவர் அனைவராலும் அறியப்பட்ட மற்றும் வெளிப்படையான தனது கொள்கையைப் பின்பற்றுவதிலும், சம்பிரதாய மற்றும் வழிபாட்டை செய்வதிலும் எந்த விதமான கட்டுப்பாடும் அல்லது வற்புறுத்தலும் அனுமதிக்கப்படாது. நான்காவதாக, ஒருவர் ஒரு மார்க்கத்தில் நிலைத்திருக்க விரும்பவில்லை என்றால், அவரை அதில் நிலைத்திருக்க கட்டாயப்படுத்துவது அனுமதிக்கப்படாது, மேலும் அதில் நிலைத்திருக்க விரும்புபவரை அவ்வாறு கட்டாயமாக வெளியேற வேண்டும் என்று நிர்பந்திக்கவும் கூடாது.

இங்கு இஸ்லாமிய மார்க்கத்தைப் பரப்புவதற்காகவே போர்கள் நடைபெற்றது என்று இஸ்லாத்தின் மீது செய்யப்படுகின்ற ஆட்சேபனை முற்றிலும் ஒரு தவறான ஆட்சேபனையாகும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இஸ்லாமிய போர்கள் வெறும் தற்காப்புப் போர்களா அல்லது அவை குழப்பம் மற்றும் தீங்குகளை நீக்கி அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகவா? என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் நடைமுறை எவ்வாறாக இருந்தது என்றால் அல்லாஹ் அவரை முழு உலகிற்கும் வழிகாட்டியாகவும் தூதராகவும் அனுப்பி, நபிமார்களின் முத்திரையாக நியமித்திருந்தாலும், எந்த ஒரு முஸ்லிமும் எந்த ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும் தன்னை மற்ற நபிமார்களை விட உயர்ந்தவர் என்று கூறி அமைதியின் சூழலைக் கெடுப்பதை அவர் ஒருபோதும் விரும்பியதும் இல்லை; பொறுத்துக் கொள்ளவும் இல்லை.

இவ்வாறு, ஸஹீஹ் புகாரியில் ஓர் அறிவிப்பு உள்ளது. ஒருமுறை ஒரு யூதர் சந்தையில் பொருட்களை விற்றுக் கொண்டிருந்தபோது, ஒரு முஸ்லிம் அந்த யூதரிடம் அவர் விரும்பாத ஒரு சிறிய விலையைக் கூறினார். அதற்கு அந்த

யூதர், “உலகத்தார் அனைவரை விடவும் மூஸா (அலை) அவர்களுக்கு மேன்மை அளித்தவன் மீதாணையாக!” என்று கூறினார். அதைக் கேட்டு (கோபம் கொண்ட) அந்த முஸ்லிம் கையை ஓங்கி யூதரின் முகத்தில் அறைந்து விட்டார். உடனே அந்த யூதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, “நாங்கள் உங்கள் பொறுப்பிலும் பாதுகாப்பிலும் இருக்கின்றோம். இந்த முஸ்லிம் என்னை அறைந்து எனக்கு அநீதி இழைத்து விட்டார்” என்று முறையிட்டார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அந்த முஸ்லிமின் மீது மிகவும் கோபமடைந்தவாறு ”நபிமார்களில் எனக்கு எந்த சிறப்பையும் அளிக்காதீர்கள்” என்று கூறினார்கள்.

மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு, மார்க்கத்தில் பல வேறுபாடுகள் இருந்த போதிலும், பரஸ்பர ஒற்றுமையை ஏற்படுத்தவும் வெறுப்பை அகற்றவும் கூடிய ஒரு பொதுவான நிலையைக் கண்டறிய முயற்சிப்பது அவசியமாகும். எனவே, எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

قُلْ يَآ اَهْلَ الْكِتٰبِ تَعَالَوْا اِلٰى كَلِمَةٍ سَوَآءٍۢ بَيْنَنَا وَبَيْنَكُمْ اَلَّا نَعْبُدَ اِلَّا اللّٰهَ
وَلَا نُشْرِكَ بِهٖ شَيْـًٔا وَّلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا اَرْبَابًا مِّنْ دُوْنِ اللّٰهِ ؕ
فَاِنْ تَوَلَّوْا فَقُوْلُوا اشْهَدُوْا بِاَنَّا مُسْلِمُوْنَ

நீர் கூறுவீராக! வேதத்தைவுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்குமிடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின்பால் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வை அன்றி வேறவரையும் வணங்க மாட்டோம். அவனுக்கு வேறெதனையும் இணையாக்க மாட்டோம். அல்லாஹ்வை விட்டு விட்டு நம்முள் சிலர் வேறு சிலரை கடவுள்களாக ஆக்கிக் கொள்ள மாட்டோம். ஆனால் அவர்கள் புறக்கணித்து விட்டால், நீங்கள் அவர்களிடம், நாங்கள் (இறைவனுக்குக்) கட்டுப்பட்டு நடப்பவர்களாயிருக்கின்றோம் என்பதற்கு நீங்கள் சாட்சிகளாயிருங்கள் என்று கூறுங்கள். (3:65)

எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மக்கத்து கா.ஃபிர்களின் தொடர்ச்சியான எதிர்ப்புகள் கடுமையான துன்புறுத்தல் மற்றும் துன்பங்கள் இழைக்கப்பட்டதன் காரணமாகவும் எல்லாவற்றிற்கும் மேலாக முஸ்லிம்களுக்கு தங்களுடைய கொள்கைக்கு ஏற்ப அமல் செய்வதிலிருந்தும் தப்லீக் செய்வதிலிருந்தும் கட்டாயமாகத் தடுத்த காரணத்தினாலும் இறைவனின் அனுமதியுடன் மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். அங்கு புதியதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சில குடும்பங்களைத் தவிர யூதர்களின் மூன்று கோத்திரங்களான பனூ கைநகா.ஃ, பனூ நளீர் மற்றும் பனூ குரைஸா கோத்திரங்களும் இணைவைப்பவர்களுடைய இரண்டு கோத்திரங்களான அவுஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரங்களும் இருந்தன.

இந்த ஐந்து கோத்திரங்களிடையே ஒழுங்குமுறை மற்றும் ஒழுக்கம் என்ற ஒன்றே இல்லை. குறிப்பாக, மூன்று யூத கோத்திரங்களும் தனித்தனி கோட்டைகளில் சுதந்திரமாகவும் தன்னாட்சி முறையிலும் வசித்து வந்தனர். இந்தச் சூழ்நிலையில், நபி (ஸல்) அவர்கள், மதீனா வாழ் மக்களிடத்தில் மத நல்லிணக்கம், அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டும் நோக்கத்துடன், குறிப்பாக யூத கோத்திரங்களுடன் ஒரு எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தை மேற்கொண்டார்கள். அதன் விதிமுறைகள் பின்வருமாறு:

1) முஸ்லிம்கள் மற்றும் யூதர்கள் ஆகிய நாங்கள் ஒருவருக்கொருவர் அரவணைப்போடும் நேர்மையுடனும் இருப்போம். மேலும் ஒருவர் மற்றவருக்கு எதிராக மோசடி செய்யவோ அல்லது கடுமையாகவோ நடந்து கொள்ள மாட்டோம்.

2) அனைத்தும் சமுதாயத்திற்கும் மார்க்கத்தில் சுதந்திரம் உண்டு.

3) அனைத்து வகையான கருத்து வேறுபாடுகள் மற்றும் சச்சரவுகளுக்கும், தீர்வு காண நபி (ஸல்) அவர்களிடமே வர வேண்டும். மேலும் ஒவ்வொரு தீர்ப்பும் அந்த அந்த சமூதாயத்தின் வேதத்தின் அடிப்படையில் இருக்கும்.

4) அனைத்து குடிமக்களின் உயிர்களும் சொத்துக்களும் பாதுகாக்கப்படும்.

5) யூதர்கள் அல்லது முஸ்லிம்களுக்கு எதிராக எந்த நாடு போர் தொடுத்தாலும், யூதர்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவும் உதவவும் எழுந்து நிற்பார்கள்.

6) மதீனா மீது தாக்குதல் நடந்தால், அனைவரும் ஒன்றிணைந்து அதை எதிர்த்துப் போராடுவார்கள்.

7) எந்த ஒரு பிரிவினரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதி இன்றி போருக்காக வெளியேறக் கூடாது.

8) இந்த உடன்படிக்கையின்படி எந்த ஒரு கொடுமைக்-காரனோ அல்லது குழப்பவாதியோ தண்டனையிலிருந்து பாதுகாப்பாக இருக்க மாட்டார்கள் போன்றவையாகும்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அறிவிக்கின்றார்கள்:

**அல்லாஹ்வின் மீதாணையாக! அவன் இறைநம்பிக்கையாளன் அல்லன். அல்லாஹ்வின் மீதாணையாக! அவன் இறைநம்பிக்கையாளன் அல்லன். அல்லாஹ்வின் மீதாணையாக அவன் இறைநம்பிக்கையாளன் அல்லன்' என்று (மூன்று முறை) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். 'அவன் யார்? இறைத்தூதர் (ஸல்) அவர்களே!' என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் எவனுடைய நாச வேலைகளிலிருந்து அவனுடைய அண்டை வீட்டார் பாதுகாப்பு உணர்வைப் பெறவில்லையோ அவன்தான் என்று பதிலளித்தார்கள்.**

(ஸஹீஹ் புகாரி 6016)

யூத கோத்திரங்கள் இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மீறி வந்தாலும், நபி (ஸல்) அவர்கள் எப்போதும் அவர்களிடம் அன்பாக நடந்து கொண்டு, தமது வாக்குறுதியை நிறைவேற்றினார்கள்.

எனவே, இத்தகைய சாதகமற்ற சூழ்நிலைகளில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் ஆட்சிப் பொறுப்பை மிகத் திறமையாக நிர்வகித்தார்கள், குறிப்பாக வெவ்வேறு மதங்கள், பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் வெவ்வேறு கொள்கைகள் கோட்பாடுகளைக் கொண்டிருந்த ஒரு மக்களிடையே ஹிக்மத்துடன் செயல்பட்டார்கள். ஒவ்வொருவருக்கும் தங்கள் நம்பிக்கையையும் பிரிவையும் பின்பற்றவும், அதை வெளிப்படுத்தவும், அமைதியாகப் பிரச்சாரம் செய்யவும் சுதந்திரம் அளித்து, பின்னர் அதைச் செயல்படுத்திக் காட்டுவது மார்க்க சுதந்திரம் மற்றும் மத நல்லிணக்கத்திற்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும்.

ஒருமுறை நஜ்ரானிலிருந்து ஒரு கிறிஸ்தவக் குழு மதீனாவிற்கு நபி (ஸல்) அவர்களுடன் மத கலந்துரையாடலுக்காக வந்தது. அன்னார் அவர்களை மிகுந்த மரியாதையுடனும் கண்ணியத்துடனும் மஸ்ஜிது நபவியில் தங்க வைத்தார்கள். அவர்கள் தங்கள் வழிபாட்டிற்காக எங்கு செல்லலாம் என்று எண்ணியபோது, அன்னார் இங்கும் அங்கும் செல்ல வேண்டிய அவசியமில்லை. இந்தப் பள்ளிவாசலிலேயே உங்கள் வழிமுறையின்படி நீங்கள் இறைவணக்கம் செய்யலாம் என்று கூறினார்கள். திருக்குர்ஆனும் இவ்வாறு போதித்துள்ளது:

وَلَا تَسُبُّوا الَّذِيْنَ يَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ فَيَسُبُّوا اللّٰهَ عَدْوًا بِغَيْرِ عِلْمٍ ط

அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைப்பவற்றை நீங்கள் ஏசாதீர்கள். இல்லையாயின், அவர்கள் அறியாமையினால் அல்லாஹ்வை ஏசுவார்கள். (6:109)

மக்கத்து இணைவைப்பாளர்கள் உஹதுப் போரின் போது ஷஹீதாக்கப்பட்ட முஸ்லிம் உடல்களைச் சிதைத்து, அதாவது அவர்களின் மூக்கு, காதுகள் போன்றவற்றை வெட்டி, அவமதித்தனர், ஆனால் நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் இவ்வாறான முறையில் அவர்களைப் பழிவாங்கியதில்லை. மாறாக, அன்னாரது முன்மாதிரி இதுவாகவே இருந்தது.

ஒருமுறை, ஒரு யூதரின் ஜனாஸா வந்து கொண்டிருந்தது. நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள். ஒருவர், ”இது ஒரு யூதரின் ஜனாஸா” என்றார். அன்னார், “அவருக்கு ஆன்மா இல்லையா? அவர் ஒரு மனிதர் இல்லையா?” என்று கேட்டார்கள். (புகாரி)

ஹஸ்ரத் ய.்.லா பின் முர்ரா (ரலி) அவர்கள், அறிவிக்கிறார்கள். நான் நபி (ஸல்) அவர்களுடன் பலமுறை பயணம் செய்துள்ளேன். அன்னார் எந்த மனித சடலத்தையாவது பார்த்தால் அதை அடக்கம் செய்யாமல் ஒருபோதும் சென்றதில்லை. மேலும் அந்த சடலம் முஸ்லிமுடையதா அல்லது கா.்.பிருடையதா என்று ஒருபோதும் கேட்டதில்லை.

பத்ர் போரில் கொல்லப்பட்ட பல இணைவைப்பாளர் -களின் தலைவர்களின் உடல்களை மக்காவாசிகள் திறந்த வெளி மைதானத்தில் போட்டு விட்டு ஓடி விட்டனர். நபி (ஸல்) அவர்கள் அந்த அனைத்து சடலங்களையும் ஒரு குழியில் அடக்கம் செய்தார்கள். அதை கல்பே பதர் - பதரின் இதயம் என்று கூறுவார்கள். (புகாரி, கிதாபுல் மகாஸி)

அஹ்ஸாப் போரின்போது இணைவைப்பாளர்களின் ஒரு தலைவன் நவ்.்.பல் பின் அப்துல்லாஹ் இறந்து விட்டான். மக்கத்து முஷ்ரிக்கீன் ஹம்ஸா (ரலி) அவர்களுடன் செய்த மிருகத்தனமான செயலின் காரணமாக இயல்பாகவே அவர்கள் அச்சத்தில் இருந்தார்கள். அவர்களுடைய தலைவரின் சடலத்தையும் அவ்வாறு சிதைத்து விடலாம் என்று எண்ணி அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் எங்களிடமிருந்து பத்தாயிரம் திர்ஹத்தைபி பெற்றுக் கொண்டு நவ்.்.பலின் சடலத்தை திருப்பிக் கொடுத்து விடுமாறு செய்தி அனுப்பினார்கள். கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் நாங்கள் சடலங்களுக்கு எந்த ஒரு தொகையையும் பெறுவதில்லை என்று கூறி நீங்கள் உங்களுடைய சடலத்தை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள். (தலாயிலுந் நுபுவ்வதி லில் பைஹக்கி, தொகுப்பு 3)

வெற்றி கொள்ளப்பட்ட சமுதாயங்களிடம் குறிப்பாக, நீண்ட காலமாக கூற முடியாத துன்பங்களையும் சித்திரவதை -களையும் எவர்களிடமிருந்து சகித்துக் கொண்டார்களோ, அவர்களிடம் நன்னடத்தையை வெளிப்படுத்துவது உலக வரலாற்றில் இஸ்லாத்தின் நிறுவனர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களைத் தவிர வேறு எங்கும் காண முடியாது.

மக்கத்து இணைவைப்பாளர்களின் தலைவர் அபூஜஹலின் மகன் இக்ரிமாவும் தன் தந்தையைப் போலவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக போர் புரிந்து கொண்டே இருந்தார். எதுவரை என்றால் மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் சார்பாக பொது மன்னிப்புக்கான அறிவிப்பு செய்த பிறகும் ஒரு குழுவைத் தாக்கி இரத்தம் சிந்துவதற்கான காரணம் ஆகி விட்டார். மேலும் போர்க் குற்றத்தின் காரணமாக மரண தண்டனைக்குரியவராகக் கருதப்பட்டார். தன் உயிரைக் காப்பாற்றுவதற்காக எமன் நாட்டை நோக்கி ஓடி விட்டார். முஸ்லிமாக இருந்த அவருடைய மனைவி உம்மே ஹக்கீம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து தன்னுடைய கணவரை மன்னிக்குமாறு கேட்டதற்கிணங்க கருணையுள்ளம் கொண்ட மாநபி (ஸல்) மன்னித்து விட்டார்கள். அவள் புறப்படத் தயாராக இருந்த படகில் அமர்ந்து கொண்டிருந்த தன்னுடைய கணவனிடம் மாநபி (ஸல்) அவர்கள் உங்களை மன்னித்து விட்டார்கள்; வாருங்கள் என்று கூறினாள்.

ஆனால் இக்கிரமாவிற்கு, அன்னாரது மன்னிப்பின் மீது நம்பிக்கை வரவில்லை. எவ்வாறிருப்பினும் அவர் தன்னுடைய மனைவியுடன் தயக்கமாகவும் அச்சத்துடனும் மக்கா திரும்பி வந்து விட்டார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று நீங்கள் என்னை நிஜமாகவே மன்னித்து விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு ஆம் நான் உன்னை மன்னித்து விட்டேன் என்று அன்னார் கூறினார்கள். மீண்டும் அவர் நான் என்னுடைய மார்க்கத்தில் இருக்கின்ற நிலையிலேயே நீங்கள் என்னை

*(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)*

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)



9

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

### மூன்றாவது அத்தியாயம்

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

(அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் தொடங்குகின்றேன்) என்ற வசனம் தொடர்பான விளக்கவுரையின் தொடர்ச்சி....

மேலும் அசல், ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத் ஆகியவை மட்டுமே ஆகும். மேலும் இவை இரண்டும் இறைவனுடைய இரகசியத்தின் தோற்றமாக இருக்கின்றன. பிறகு நேரான பாதையின் இமாமாக இருக்கின்ற நமது நபி கரீம் (ஸல்) அவர்களுக்கு (ரஹ்மான், ரஹீம் ஆகிய) இந்த இரண்டு பண்புகளிலிருந்து முழுமையான பங்கு வழங்கப்பட்டிருக்கிறது. பிறகு அல்லாஹ் அவர்களுக்கு ரஹ்மான் (சுயமாக அருள்பாலிப்பவன்) என்பதன் நிழலாக இருக்கின்ற முஹம்மது (புகழப்படுபவர்) என்ற பெயரையும், ரஹீம் (முயற்சிகளுக்கேற்ப பலன் கொடுப்பவன்) என்பதன் நிழலாக இருக்கின்ற அஹ்மது என்ற பெயரையும் உருவாக்கினான். மேலும் இதில் உள்ள இரகசியம் என்னவென்றால், முழுமையான மனிதன், இறைவனுடைய ஒழுங்குமுறைகள் மற்றும் இறைவனின் பண்புகள் ஆகியவற்றால் ஒருங்கிணையாத வரை அவன் முழுமை பெற்றவனாக முடியாது. மேலும் நாம் ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத் என்ற பெயரைக் கொடுத்திருக்கின்ற இந்த இரண்டு பண்புகள்தான் எல்லா பண்புகளின் திரும்பும் இடம் ஆகும் என்பது உமக்கு நன்றாகத் தெரியும். رَحۡمَانِیَّت (ரஹ்மானிய்யத் சுயமாக அருள்பாலிப்பது) என்பது اِحۡسَان (இஹ்ஸான் - பேரருள்) என்ற வழியில் பொதுவான رَحۡمَت (ரஹ்மத் - அருள்) ஆகும் என்பதை நீர் அறிவீர். (இறைவனாகிய) அவனுடைய அருள் ஒவ்வொரு நம்பிக்கையாளர், மறுப்பாளர் - இன்னும் கூறுவதென்றால், எல்லா வகையான உயிரினத்திற்கும் கிடைக்கிறது. رَحِیۡمِیَّت (ரஹீமிய்யத்) என்பதைப் பொருத்தவரை, அது اَحۡسَنُ الۡخَالِقِیۡنَ (அஹ்ஸனுல் காலிகீன் - படைப்பாளர்களில் சிறந்தவன்) ஆகிய இறைவனின் சிறப்பான ரஹ்மத் (அருள்) ஆகும். அது மற்ற விலங்குகள், நிராகரிப்பவர்கள் ஆகியவர்களைத் தவிர நம்பிக்கை கொண்டவர்களுக்கு மட்டும் கண்டிப்பாக சிறப்பாகக் குறிப்பிட்டவையாகும்.

எனவே முழு மனிதராகிய (ஹஸ்ரத்) مُحَمَّدٌ (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இந்த இரண்டு பண்புகளின் தோற்றமாக இருப்பது கட்டாயமான -தாகும். இதன் காரணமாகவே அண்ட சராசரங்களைப் படைத்த இறைவனிடமிருந்து நபி (ஸல்) அவர்களின் பெயர் مُحَمَّدٌ (முஹம்மது - புகழப்படுபவர்) என்றும், اَحۡمَدُ (அஹ்மது - அதிகமாகப் புகழ்பவர்) என்றும் வைக்கப்பட்டது. மேலும் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களின் மகத்துவத்தைக் குறித்து,

لَقَدۡ جَآءَکُمۡ رَسُوۡلٌ مِّنۡ اَنۡفُسِکُمۡ عَزِیۡزٌ عَلَیۡہِ مَا عَنِتُّمۡ حَرِیۡصٌ عَلَیۡکُمۡ بِالۡمُؤۡمِنِیۡنَ رَءُوۡفٌ رَّحِیۡمٌ

(லகத் ஜாஅக்கும் ரஸூலும் மின் அன்ஃபுஸிக்கும். அஸீஸுன் அலைஹி மா அனித்தும். ஹரீஸுன் அலைக்கும் பில் மு஁மினீன ரவூஃபுர் ரஹீம். பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! உங்களிலிருந்தே உங்களிடம் ஒரு தூதர் வந்துள்ளார். உங்களுக்கு ஏற்படும் துன்பம் அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது. அவர் உங்கள் நலனில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகவும், நம்பிக்கை கொண்டவர்களை நேசிப்பவராகவும், அவர்களுக்கு மிக்க கருணை காட்டுபவராக -வும் இருக்கின்றார்) என்று கூறினான். (திருக்குர்ஆன் 9:128 காண்க).

அல்லாஹ் தனது عَزِیۡزٌ (அஸீஸ்) என்ற சொல்லிலும், حَرِیۡصٌ (ஹரீஸ்) என்ற சொல்லிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனுடைய அந்த மகத்தான அருளிலிருந்து رَحۡمٰنٌ (ரஹ்மான் சுயமான அருள்பாலிப்பவன்) என்ற பண்பின் தோற்றம் ஆவார்கள் என்பதன் பக்கம் சுட்டிக்காட்டி இருக்கிறான்.★

ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் மனித இனத்திற்கும், விலங்குகளுக்கும், காஃபிர்கள், ஈமான் கொண்டவர்கள் அனைவருக்கும் رَحۡمَۃٌ لِّلۡعٰلَمِیۡنَ (ரஹ்மத்துன் லில்ஆலமீன் அனைத்துலகங்களுக்கும் அருட்கொடை) ஆவார்கள். பிறகு, بِالۡمُؤۡمِنِیۡنَ رَءُوۡفٌ رَّحِیۡمٌ (பில் முஃமினீன ரவூஃபுர் ரஹீம் - அவர் நம்பிக்கை கொண்டவர்களுக்கு பரிவு காட்டுபவராகவும், அவர்களுக்கு மிக்க கருணை காட்டுபவராகவும்) ஆக

★நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் அருட்கொடை -யாக அனுப்பியுள்ளோம் என்று அல்லாஹ் கூறியிருக்கிறான். (21:108 காண்க). இந்தப் பொருளோ, ரஹ்மானிய்யத் பண்புக்கு மட்டுமே பொருந்துகின்றன. ஏனெனில் ரஹீமிய்யத் என்பதோ நம்பிக்கை கொண்டவர்களின் ஓர் உலகத்துடன் மட்டும் தனித்துவம் கொண்டதாக இருக்கிறது - நூலாசிரியர்.

இருக்கிறார் என்று கூறி, (9:128 காண்க) அவன் நபி (ஸல்) அவர்களை ரஹ்மான், ரஹீம் ஆக்கி விட்டான். இது எந்த அறிவுள்ளவருக்கும் மறைமுகமானதல்ல. மேலும் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்திருக்கின்றான். மேலும் நபி (ஸல்) அவர்களின் மகத்துவம் மற்றும் கண்ணியத்தின் காரணமாக திருக்குர்ஆனில் வந்திருப்பது போன்று, நபி (ஸல்) அவர்களுடன் خُلُقٍ عَظِيْمٍ (குலுகுன் அழீம் - மகத்தான நல்லொழுக்கம்) என்பதை தொடர்புபடுத்திக் கூறினான்.

நபி (ஸல்) அவர்களின் மகத்தான நல்லொழுக்கங்கள் என்ன என்ற கேள்வியை நீர் எழுப்புவீர் என்றால், அதற்கு நமது விடை, நபி (ஸல்) அவர்கள் ரஹ்மான் மற்றும் ரஹீம் ஆவார்கள். இந்த இரண்டு ஒளிகளும் ஆதம் ஈரமான மண்ணிற்கும், தண்ணீருக்கும் இடைப்பட்ட நிலைமையில் இருந்த அந்த நேரத்திலேயே நபி (ஸல்) அவர்களுக்கே வழங்கப்பட்டு விட்டன. ஆதமின் இருப்பு மற்றும் உடலின் எந்தவோர் அடையாளமும் இன்னும் இல்லாதிருந்த அந்த நேரத்திலும் நபி (ஸல்) அவர்கள் நபி ஆக இருந்தார்கள்.

அல்லாஹ் ஒளியாக இருகின்றான். அவன் ஓர் ஒளியை உருவாக்கத் தீர்மானித்தான். ஆகவே தனித்தன்மை வாய்ந்த, முத்தாக இருக்கின்ற முஹம்மது (ஸல்) அவர்களைப் படைத்தான். அல்லாஹ், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முஹம்மது மற்றும் அஹ்மது ஆகிய இரண்டு பெயர்களையும் ரஹ்மான் மற்றும் ரஹீம் ஆகிய தனது இரண்டு பண்புகளுடன் இணைத்து விட்டான். எனவே கட்டுப்படும் உள்ளத்தைக் கொண்டு சென்றவாறு அல்லாஹ்வுக்கு முன்னால் நிற்கும் எல்லா மக்களையும் விட நபி (ஸல்) அவர்கள் முந்திச் சென்று விட்டார்கள். ஹுஸுர் (ஸல்) அவர்களின் இந்த இரண்டு பெயர்களும் ஞானமுள்ள குர்ஆனின் போதனையில் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன.

நமது நபி (ஸல்) அவர்கள் நம்முடைய رَبُّ الْأَعْلَى (ரப்புல் அ.'.லா - மிக உயர்ந்த இறைவன்) என்பவனின் (ரஹ்மான், ரஹீம் ஆகிய) இரண்டு பண்புகளை ஒருங்கே கொண்டவர்களாக இருப்பதைப் போன்று, மூஸா (அலை), மற்றும் ஈஸா (அலை) அவர்களின் ஒளியின் தொகுப்பாக இருக்கின்றார்கள். இந்த ஒழுங்கமைப்பு என்பது, நபி (ஸல்) அவர்களுக்கு இந்தத் தனித்துவமான அந்தஸ்து வழக்கப்பட வேண்டும் என்ற தேவையைக் கொண்டதாக இருந்தது. எனவே இதன் காரணமாகவே அல்லாஹ் அவர்களின் பெயரை 'முஹம்மது' என்றும் 'அஹ்மது' என்றும் வைத்தான். மேலும் நபி (ஸல்) அவர்கள் جَلَالٌ (ஜலால் - கம்பீரம்) மற்றும் جَمَالٌ (ஜமால் - அழகு) ஆகிய பண்புகளின் வாரிசானார்கள். மேலும் இந்த ஒளியால் அவர்கள் தனித்தன்மை வாய்ந்தவர் -களாக ஆனார்கள். இந்த விஷயம் رَبُّ الْعَالَمِيْنَ (ரப்புல் ஆலமீன் - அனைத்துலகங்களின் இறைவன்) என்பவனின் இரண்டு பண்புகளைச் சேர்ந்ததாக இருப்பதைப் போன்றே, நபி (ஸல்) அவர்களுக்கும் مَحْبُوْبُوْنَ (மஹ்பூபுகள் - நேசம் காட்டப்பட்ட -வர்களின்) கம்பீரமும், مُحِبُّوْنَ (முஹிப்புகளின் - நேசம் கொள்பவர்களின்) உள்ளமும் வழங்கப்பட்டது.

எனவே அவர்கள் நபி (ஸல்) அவர்கள் எல்லா புகழப்படுபவர்களையும், புகழ்கின்றவர்களையும் விட மிகச் சிறந்தவராக இருக்கின்றார்கள். அல்லாஹ், நபி (ஸல்) அவர்களை தனது இந்த இரண்டு பண்புகளில் இணைத்திருக்கிறான். மேலும் அவன் தனது இந்த இரண்டு அருள்களிலிருந்து பெரும் பகுதியை அவர்களுக்கு வழங்கியுள்ளான். மேலும் நபி (ஸல்) அவர்களுக்கு இந்த இரண்டு நீரூற்றுகளிலிருந்தும் நீரூட்டினான். மேலும் (ஜலால், மற்றும் ஜமால் ஆகிய) தனது இரண்டு கைகளாலும் நபி (ஸல்) அவர்களைப் படைத்தான். எனவே நபி (ஸல்) அவர்கள், அழகிய பானத்தைக் கொண்ட கண்ணாடியைப் போன்றவர்களாகி விட்டார்கள். அல்லது விளக்கு இருக்கும் மாடத்தைப் போன்றவர்களாகி விட்டார்கள். மேலும் அவன் தனது இந்த இரண்டு பண்புகளுக்கு எடுத்துக்காட்டாக நபி (ஸல்) அவர்கள் மீது புகழப்படும் .'.புர்கானை இறக்கினான். மேலும் அதில் ஜலால் (கம்பீரம்), ஜமால் (அழகு) ஆகியவற்றை ஒன்று சேர்த்தான். மேலும் அதன் கூற்றை எல்லா கருத்துகளையும் ஒருங்கே கொண்ட தொகுப்பாக ஆக்கினான். மேலும் அதை தவ்ராத், இஞ்சீலின் சாறு ஆகவும், தனது ஜலீல் (கம்பீரமான), ஜமீல் (அழகான) முகத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாகவும் ஆக்கினான்.

பிறகு அவன் இந்த கண்ணியமிக்கவரின் (அருள் நிறைந்த) கோப்பையிலிருந்து உம்மத்திற்கு ஒரு பங்கை வழங்கினான். மிக்க அறிந்தவனாகிய இறைவனிடமிருந்து கல்வி பெற்ற பரிசுத்தமான ந.'.ப்ஸ் மூலமாக அவர்களுக்கு போதனையை வழங்கினான். எனவே சிலர், ரஹ்மானிய்யத்தின் பண்பிலிருந்து வெளியான முஹம்மது என்ற பெயரின் அந்த நிரூற்றிலிருந்து நிரம்ப நீர் அருந்தினர்; இன்னும் சிலர், உண்மையில் ரஹீமிய்யத்தைக் கொண்ட அஹ்மது என்ற பெயரின் அந்த நீரூற்றிலிருந்து வாய் நிரம்ப நீர் அருந்தினர். மேலும் இது துவக்கத்திலிருந்தே நியமிக்கப்பட்ட தக்தீர் (இறை நியதி) ஆக இருந்தது. மேலும் இது, குறித்த நேரத்தில் நிறைவேறவிருந்த, எல்லா நபிமார்களின் நாவுகளிலிருந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருந்த வாக்குறுதி ஆகும்.

ஏனெனில் அஹ்மது என்ற பெயர் யவ்முத்தீன் (இறுதி நாள்) வெளிப்படும்போதும், நம்பிக்கை கொண்டவர்கள் எழுப்பப்படும் சந்தர்ப்பத்திலும் அல்லாஹ் கொண்டு வருகின்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹைத் தவிர தனது முழுமையான தோற்றத்துடன் வாரிசுகளில் எவரிடமும் தனது சிறப்புத்தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகத் தோன்றாது. மேலும் அல்லாஹ் முஸ்லிம்களை பலவீனமானவர்களைப் போன்றும், இஸ்லாத்தை காட்டில் எறியப்பட்டு விட்ட குழந்தையைப் போன்றும் காண்பான். எனவே அவன் தன் சார்பாக அவர்களுக்காக (அற்புதமான) வேலைகளைக் காட்டுவான். மேலும் அவர்களுக்காக, (இறைவன்) தானே, வானத்திலிருந்து இறங்குவான். அப்போது அவனது ஆட்சி வானங்களில் இருப்பதைப் போன்றே, பூமியிலும் நிலைபெற்று விடும். கழுத்துளை வெட்டாமலேயே ஷைத்தான்கள் அழிந்து விடுவார்கள். மேலும் எல்லா காரணிகளும் அறுந்து விடும். மேலும் எல்லா விஷயங்களும் எஜமானர்களுக்கெல்லாம் எஜமானன் ஆகிய இறைவனின் பக்கம் திரும்பி விடும்.

இஸ்ராயீல் மக்களின் இறுதி காலத்தில் அவர்களிடம் ஈசப்னு மர்யம் தோன்றியபோது நிறைவேறிய அந்த வாக்குறுதியைப் போன்று, இது அல்லாஹ்வின் உண்மையான வாக்குறுதி ஆகும். மேலும் அவர்கள் ஜலீல் (கம்பீரமானவன்)

ஆகிய இறைவனுக்குக் கட்டுப்படாதவர்களை கொலை செய்யாமல் மார்க்கத்தைப் பரப்பினார்கள். நன்கு அறிந்தவனும், மிக மேலானவனும் ஆகிய இறைவன் இந்த(முஹம்மதிய்ய)த் தொடரின் இறுதியையும் கலீமுல்லாஹ் ஆகிய மூஸாவின் கலீ.்.பாக்களின் இறுதியைப் போன்று ஆக்குவது அவனுடைய தக்தீரில் (நியதியில்) இருந்தது. இதன் காரணமாகவே அவன் இந்தத் தொடரின் முடிவை மற்ற உதவியாளர்களின் உதவியிலிருந்து தன்னிறைவைக் கொண்டதாக வைத்தான். மேலும் இதை مَالِكِ يَوْمِ الدِّيْنِ (மாலிகி யவ்மித்தீன்) என்பதற்கான உண்மையின் தோற்றமாக ஆக்கி விட்டான். இது தொடர்பாக கொஞ்ச நேரத்திற்குப் பிறகு த.்.ப்ஸீர் (விளக்கவுரை) வரும். இந்தக் கூற்றின் நிறைவு என்னவெனில், மக்களில் சிறந்தவராக இருக்கும் நமது நபி, காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் தேர்ந் -தெடுக்கப்பட்டவராகவும், பெருமைக்குரிய இறைவனுக்கு எல்லா மக்களையும் விட அதிக நேசத்திற்குரியவராகவும் இருக்கின்ற நிலையில், அல்லாஹ் சுப்ஹானஹூ தஆலா நபி (ஸல்) அவர்களிடம் தனது (ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத் ஆகிய) இரண்டு மகத்தான பண்புகளை நிழலாக ஒன்று சேர்க்க விரும்பினான். அதன்படி, 'முஹம்மது' (அதிகமாக புகழப்படுபவர்) மற்றும் 'அஹ்மது' (அதிகமாகப் புகழ்பவர்) ஆகிய இந்த இரு பண்புகளும் ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத்தின் நிழலாக இருக்கும் வகையில், அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்தப் பெயர்களை வழங்கினான்.

எனவே அவன் إِيَّاكَ نَعْبُدُ وَ إِيَّاكَ نَسْتَعِيْنَ இய்யாக ந.்.புது வ இய்யாக நஸ்தயீன் - நாங்கள் உன்னையே வணங்குகிறோம் உன்னிடமே உதவி தேடுகின்றோம்) என்ற தனது கூற்றில் சுட்டிக் காட்டுவது என்னவெனில், ஒரு முழுமையான அடியார், فَنَا فِي اللهِ (.்.பனா .்.பில்லாஹ் - அல்லாஹ்விடம் முழுமையாக தன்னை மாய்த்துக் கொள்ளுதல்) என்ற அடியார்களைச் சேர்ந்தவராக ஆகி விடும்போது, அவருக்கு அல்லாஹ்வின் رَبُّ الْعَالَمِيْنَ (ரப்புல் ஆலமீன் அனைத்துலகங்களையும் பரிபாலிப்பவன்) என்ற பண்புகள் வழங்கப்படுகின்றன. இறைவனின் பண்புகளின் மேன்மைகளில் ஒவ்வொரு மேன்மையும் அவனுடைய 'ரஹ்மான்' மற்றும் 'ரஹீம்' ஆக இருப்பதைச் சார்ந்திருக்கிறது என்பதை நீர் அறிவீர். இதனாலேயே அல்லாஹ் இவ்விரண்டையும் 'பிஸ்மில்லாஹ்' என்பதுடன் தனித்துவம் வாய்ந்ததாக்கியுள்ளான்.

மேலும் 'முஹம்மது' மற்றும் 'அஹ்மது' என்ற பெயர் 'ரஹ்மான்' மற்றும் 'ரஹீம்' என்பதன் பிரதிநிதியாக இருக்கின்றன என்பதை நீர் அறிந்து கொண்டு விட்டீர். மேலும் எல்லாம் அறிந்தவனும், ஞானம் மிக்கவனும் ஆகிய அல்லாஹ் ('ரஹ்மான்' மற்றும் 'ரஹீம்' ஆகிய) இந்த இரண்டு பண்புகளில், இவற்றில் மறைந்திருந்த எல்லா மேன்மைகளையும் வைத்து விட்டான். எனவே முஹம்மதிய்யத் மற்றும் அஹ்மதிய்யத் எனும் கண்ணாடியில், தனது ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத் ஆகியவற்றின் உண்மை நிலையைக் காட்டுவதற்காக அல்லாஹ் சந்தேகமின்றி, இந்த இரண்டு பெயர்களையும் தனது இரண்டு பண்புகளின் நிழலாகவும், தனது இரண்டு நிலைமைகளின் தோற்றமாகவும் ஆக்கி விட்டான். பிறகு நபி(ஸல்) அவர்களின் உம்மத்திலுள்ள முழுமையானவர்கள் நபி (ஸல்) அவர்களின் ஆன்மிகப் பகுதிகளுக்கும், நபித்துவத்தின் உண்மைத்துவத்திற்கும் உறுப்புகளாக இருக்கும்போது, அல்லாஹ் குற்றமற்ற அந்த நபி (ஸல்) அவர்களின் அடையாளங்களை எஞ்சியிருக்க வைப்பதற்காக, அவன் நபி (ஸல்) அவர்களை அவர்களின் ஞானங்களுக்கு வாரிசாக்கியதைப் போன்றே, அவன் அவர்களை இந்த இரண்டு பெயர்களுக்கு வாரிசாக்க விரும்பினான்.

எனவே அவன் சஹாபிகளை جَلَالٌ (ஜலால் - கம்பீரம்) என்பதன் தோற்றத்தின் நிழலாக இருக்கின்ற முஹம்மது என்ற பெயரின் கீழ் நுழைத்தான். மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹை جَمَالٌ (ஜமால் - அழகு) என்பதன் தோற்றமாக இருக்கின்ற அஹ்மது என்ற பெயரின் நிழலின் கீழ் வைத்தான். இந்த அனைவரும் இந்தச் செல்வத்தை நிழலான முறையில் பெற்றனர். இந்த உண்மையான நிலையில், இந்த அந்தஸ்தில் எவரும் இணையாக இல்லை. இந்த இரண்டு பெயர்களையும் இரு கூறுகளாகப் பிரிப்பதால் அல்லாஹ்வின் நோக்கம் என்னவெனில், அவன் அதை உம்மத்திற்கு விநியோகம் செய்து அவர்களிலிருந்து ஒரு கூட்டத்தை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

எனவே அவன் அவர்களில் ஒரு கூட்டத்தை மூஸா (அலை) அவர்களின் ஜலால் (எனும் கம்பீரமான) தோற்றத்திற்கு ஒப்பானதாக ஆக்கினான். மேலும் அவர்கள் போர்களுக்காக தம்மைத்தாமே முன்னால் எடுத்து வைத்து விட்ட நபி கரீம் (ஸல்) அவர்களின் அந்த சஹாபிகள் ஆவர். மேலும் அல்லாஹ் அவர்களில் ஒரு கூட்டத்தை ஈஸா (அலை) அவர்களைப் போன்று ஜமால் (எனும் அழகு வாய்ந்தது) என்பதன் தோற்றமாக ஆக்கினான். மேலும் அவர்களுடைய உள்ளங்களை மென்மையாக்கினான். அவர்களின் இதயங்களில் சாந்தியை வைத்து விட்டான். அவர்களை மிகச் சிறந்த பண்புகளில் நிலைநாட்டினான். அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹும், அவரைப் பின்பற்றுகின்ற ஆண்களும், பெண்களும் ஆவர்.

இவ்வாறு மூஸா (அலை) அவர்கள் கூறியிருந்ததும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறியிருந்ததும் நிறைவேறியது. மேலும் ஆற்றல் மிக்க இறைவனின் வாக்குறுதி நிறைவேறியது. தேர்ந்தெடுக்கப்பட்ட நமது நபி முஹம்மது (ஸல்) அவர்களின் பெயரின் தோற்றமாகவும், أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ (அஷித்தாஉ அலல் கு.்.ப்.்.பாரி - மறுப்பாளர் -களுக்கு எதிரில் அவர்கள் மிகவும் கடுமையானவர்களாக இருப்பார்கள் - 48:30) என்ற இறைவனின் கூற்றுக்கேற்ப, சீற்றம் கொண்ட இறைவனுடைய جَلَالٌ (ஜலால் - கம்பீரம்) என்பதன் வடிவமாகவும் திகழ்ந்த அப்படிப்பட்ட சஹாபிகளைப் பற்றி ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். மேலம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சஹாபிகளில் آخَرِيْنَ مِنْهُمْ (ஆகரீன மின்ஹும் - இவர்களைச் சேராத மற்றவர்கள்) என்பது பற்றி முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். அதாவது (ஆகரீன் - கூட்டம்) மற்றும் அந்த நல்லவர்களின் இமாம் அதாவது கருணை செய்கின்ற, குறைகளை மறைக்கின்ற, أَحْمَدٌ (அஹ்மது) என்பதன் தோற்றமாகவும், கருணை காட்டுபவனும், மன்னிக்கின்றவனும் ஆகிய இறைவனின் جَمَالٌ (ஜமால் - அழகு) என்பதன்

தலையூற்றாக இருக்கின்ற அந்த மஸீஹைப் பற்றி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள், தனது கூற்றாகிய كَزَرْعٍ أَخْرَجَ شَطْـَٔهُ (கஸர்யின் அக்ரஜ ஷத்அஹூ - அவர்கள் ஒரு வயலைப் போன்றவர்கள். அது முதலில் தன் தளிரை வெளிப்படுத்தியது என்பதில் (48:30 காண்க) இன்னொரு கூட்டத்தையும், (அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த) அவர்களின் வாக்களிக்கப்பட்ட மஸீஹையும் சுட்டிக் காட்டியிருக் -கிறார்கள். அதாவது அது வேளாண் மக்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கும். அத்தகைய விளைச்சலைப் போன்றதாகும்.

மேலும் இந்த இரண்டு நபிமார்களும் தமது சொந்த பண்புகளுக்குப் பொருத்தமாக இருக்கின்ற அந்தப் பண்புகளைப் பற்றி முன்னறிவித்திருக்கின்றனர். மேலும் எவர்களின் நல்லொழுக்கங்கள் தத்தமது விருப்பமான நல்லொழுக்கங்களுக்கு ஒத்தவையாக இருந்தனவோ அத்தகைய ஜமாஅத்தைத் தேர்ந்தெடுத்தனர். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள், أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ (அஷித்தாஉ அலல் கு∴ப்∴ப்பார் - மறுப்பாளர்களுக்கு எதிரில் அவர்கள் மிகவும் கடுமையானவர்களாக இருப்பார்கள் - 48:30) என்ற தனது கூற்றில், தேர்ந்தெடுக்கப்பட்ட நமது ரஸூல் (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தோழமையைப் பெற்ற அந்த சஹாபிகளைச் சுட்டிக் காட்டினார்கள். அவர்கள் போர்க்களத்தில் கடுமையையும், உறுதியையும் காட்டினார்கள். அல்லாஹ்வின் جَلَالٌ (ஜலால் எனும்) கம்பீரத்தை இரு முனைகளும் கூரான வெட்டும் வாள் மூலமாக வெளிப்படுத்தினர். மேலும் قَهَّارٌ (கஹ்ஹார்) எனும் அதிக சீற்றம் கொண்ட அல்லாஹ்வின் தூதர் முஹம்மது என்ற பெயரின் நிழல்களாகி விட்டனர். நபி (ஸல்) அவர்கள் மீது, வானத்திலும், பூமியிலுமுள்ள நன்மை செய்பவர்கள், நல்லதை செய்பவர்கள் மற்றும் அல்லாஹ்வின் சலவாத்தும் (அருள்களும்), சலாமும் (சாந்தியும்) உண்டாவதாக.

மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள், كَزَرْعٍ أَخْرَجَ شَطْـَٔهُ (கஸர்யின் அக்ரஜ ஷத்அஹூ - தன் தளிரை வெளிப்படுத்துகின்ற ஒரு விளைநிலம்) என்பதில் آخَرِينَ مِنْهُمْ (ஆகரீன மின்ஹும் - இவர்களைச் சேராத மற்றவர்கள்) என்பது சஹாபாக்களின் இன்னோர் அமைப்பையும், அவர்களின் இமாமாகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் பக்கம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இன்னும் கூறுவதாயின், அவரது பெயர் அஹ்மது ஆகும் எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.*

மேலும் திருக்குர்ஆனில் வரக் கூடிய இந்த உவமையில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பச்சைப் பசுமையான செடிகளைப் போன்று வெளிப்படுவார் கடுமையானவரைப் போன்றோ, மூர்க்கமானவரைப் போன்றோ வெளிப்பட மாட்டார் என்பதை அது சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆயினும் திருக்குர்ஆனின் அற்புதங்களில் ஒன்று, ஜலாலீ (கம்பீரம்) என்ற தன்மையுடைய) நபியாகிய ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தனது மகத்துவத்திற்கு ஒப்பான அந்தப் பெயரை அதாவது முஹம்மது என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்கள். அது ஜலாலீ (கம்பீரம்) என்ற பெயராகும். அவ்வாறே, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தனது ஜமாலீ (அழகு என்ற தன்மையுடைய) நபியாக இருப்பதன் வகையில் அஹ்மது என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்கள் அது ஜமாலீ (அழகு) பெயராகும் என்று படிப்பவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில், (திருக்குர்ஆன் ஆகிய) அது அஹ்மது என்ற பெயரை ஈஸா (அலை) அவர்களுடனுள்ள சம்பவமாகக் குறிப்பிட்டுள்ளது. மேலும் அது ஜமாலீ பண்பாகும் அதற்கு சீற்றம், போர் ஆகியவற்றுடன் எந்தத் தொடர்பும் இல்லை.

சுருக்கமாக, (ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் மற்றும் ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் ஆகிய) இந்த இருவரில் ஒவ்வொருவரும் தத்தமது முழுமையாக ஒப்புமை உடையவராக இருப்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். எனவே நீர் இந்த நுட்பமான கருத்துகளை சிந்தனையில் வைப்பீராக. ஏனெனில் (ஒப்புமையுடையவையாக இருக்கும்) இவை உம்மை சந்தேகங்களிலிருந்து விடுவிக்கும். மேலும் இவை ஜலால் (கம்பீரமான தன்மை) ஜமால் (அழகிய தன்மை) ஆகிய இரண்டு அம்சங்களையும் தெளிவாக்கும். மேலும் திரையை அகற்றிய பின்னர் உண்மையைத் தெளிவாக்கி விடும். மேலும் நீர் இதை ஏற்றுக்கொள்ளும்போது நீர் எல்லா தஜ்ஜால்களிலிருந்தும் அல்லாஹ்வின் பாதுகாப்பு மற்றும் அவனது அடைக்காலத்தின் கீழ் வந்து விடுவீர். மேலும் எல்லா வழிகேட்டிலிருந்தும் ஈடேற்றம் பெற்று விடுவீர்.

(தொடரும்...)

* இறைஞானத்தை வேண்டுபவரே! கிளர்ச்சி செய்பவர்கள், கட்டுப்படாதவர்கள் ஆகியோருக்கு சஹாபிகள் கருணை காட்டுபவர்களாக இருந்தார்கள் என்று அல்லாஹ் புகழுக்குரிய ∴புர்கானில் எங்கேயும் குறிப்பிடவில்லை என்பதை நீர் நன்றாக நினைவில் கொள்வீராக. மற்றபடி, சஹாபிகள் ஒருவருக்கொருவர் கருணை காட்டுபவராகவும், பரிவு காட்டுபவராகவும் நடந்து கொள்வது என்பது அவர்களை جَلَالِيَّة (ஜலாலிய்யத் - கம்பீரமான பண்பு) என்ற வட்டத்திலிருந்து வெளியேற்றுவதில்லை. மாறாக, அவர்களின் தொடர்பு ஒற்றுமையில் பிணைந்திருப்பதாகும். அது ஜலால் (கம்பீரம்) எனும் ஆற்றலை அதிகமாக்குகிறது. ஏனெனில் (சஹாபிகளாகிய) அவர்கள் அல்லாஹ்வின் பார்வையில் ஒரே மனிதரைப் போன்று ரஸூல் (ஸல்) அவர்களுக்காக உறுப்புகளாக இருந்தனர். زرع (ஸர்∴ - வயல்) என்ற சொல்லின் உவமை தவ்ராத் மற்றும் இஞ்சீல் இரண்டிலும் சேர்ந்து காணப்படுகிறதே என்ற விஷயம் எவரது உள்ளத்திலும் சந்தேகத்தை எழுப்ப வேண்டாம். அவ்வாறு ஒருபோதும் அல்ல. ஏனெனில் இந்த உவமை திருக்குர்ஆனில் ஈஸா (அலை) அவர்களின் (இஞ்சீல்) வேதத்துடன் தனிப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. பிறகு நாம் இதை தவ்ராத்தில் காண்பதில்லை; விபரமாக இஞ்சீலில் காண்கிறோம். மேலும் பெரும் காரிகள் (திருக்குர்ஆனை முறைப்படி ஓதுபவர்கள்) مَثَلُهُمْ فِي التَّوْرَاةِ (மஸலுஹும் ∴பித்தவ்ராத்) என்ற திருக்குர்ஆன் வசனத்தில் (தொடர்ந்து ஓதாமல்) நிறுத்துகின்றனர் என்பது பிரபலமானதாகும். இந்த வசனங்களை ஓதும்போது இந்த உவமையான சொல்லை தவ்ராத்துடன் சேர்த்து ஓதுவதில்லை. மாறாக, எவ்வித சந்தேகமுமின்றி, உறுதியாக இதை இஞ்சீலுடன் மட்டுமே பொருந்துவதாக குறிப்பிடுகிறார்கள். இதன் காரணமாகத்தான் பழக்கத்தில் உள்ள அனைத்து குர்ஆன் பிரதிகளிலும் தவ்ராத் என்ற சொல்லில் நிறுத்துவதை ஆகுமானது என்று எழுதியிருக்கிறார்கள். உங்களுக்கு இது குறித்து சந்தேகம் இருக்குமென்றால் அறிவை அதிகப்படுத்துவதற்காக அங்கு பார்த்துக் கொள்ளுங்கள் - நூலாசிரியர்.

9

# பராஹீனே அஹ்மதிய்யா

பாகம் 2
தொகுதி 1

தமிழாக்கம்:
ஜோதி அருள்குமார் ஆஸ்டின்

சிலர் எனக்கு உதவி செய்வதற்குப் பதிலாக பெரிய உபத்திரங்களையும் கவலையையும் ஏற்படுத்துகின்றனர். நான் சில வசதி படைத்த முஸ்லிம்களுக்கு, அவர்கள் உடனடியாக வாங்குவார்கள் என்றும், மேலும் முழு நூலிற்குரிய தொகையை முன்பணமாக அனுப்பி விடுவார்கள் என்றும் நம்பி இந்நூலின் முதல் பாகத்தின் 150 பிரதிகளை அனுப்பி இருந்தேன். அது ஒரு பெரும் தொகை என்றும் கூற இயலாது. அவர்கள் தொகையை அனுப்பி விடும் பட்சத்தில் மார்க்க நோக்கங்களை எளிதில் நிறைவேற்றியிருக்கவும் அதன் மூலம் எண்ணற்ற மக்கள் பயனடைந்திருக்கவும் கூடும். எனவே சூழ்நிலைகளை அவர்களுக்கு விவரித்து கிட்டத்தட்ட 150 கடிதங்களை எழுதி இருந்தேன்.

ஆனால் இரண்டு அல்லது மூன்று தயாளகுணம் உள்ளவர்களைத் தவிர ஏனையோரில் பலர் பதில் அளிக்கவுமில்லை. அந்நூல்களின் பிரதிகளைத் திருப்பி அனுப்பவும் அக்கறை காட்டவில்லை. தபால் செலவு நிச்சயமாக விரயமாயிற்று. அந்நூலை அவர்கள் திருப்பி அனுப்பாவிடில் இம்முயற்சியும் பெரிதும் பாதிக்கப்பட்டு விடும். எனது சகோதரர்களின் கரங்களில் இருந்து உதவியோ ஒத்துழைப்போ கிடைப்பதற்குப் பதிலாக எனக்கு பெரிய காயம்தான் கிடைத்தது. இப்படித்தான் இவர்கள் இஸ்லாத்தைத் தற்காத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவார்கள் எனில் மார்க்கத்திற்கான பணிகள் அத்தனையும் அழிந்து விடும். மிகுந்த பணிவோடு இவர்களை நான் வேண்டிக் கேட்டுக் கொள்வதாவது, தாங்கள் புத்தகத்திற்கான முன்பணத்தை செலுத்த விருப்பமில்லாதிருப்பின் குறைந்தபட்சம் அப்புத்தகங்களை எனக்குத் திருப்பி அனுப்பி விடுங்கள். அதையே நான் பெரிய உபகாரமாகவும் தங்களது கருணையாகவும் ஏற்றுக் கொள்வேன். அப்படி இல்லை எனில் மிகப்பெரிய பொருட்செலவுடன் மீண்டும் முதல் பாகத்தை அச்சடிக்க வேண்டியதாகி விடும்.

தேவை இல்லை எனில், இந்நூலின் பிரதிகளை, திருப்ப அனுப்பாதிருப்பது பெரிய இழப்பை ஏற்படுத்தாது எனக் கருதுவதற்கு அவைகள் தினசரி செய்தித்-தாள்கள் அல்ல. இந்நூலில் ஒவ்வொரு பாகமும் இன்றியமையாதது. எனவே அந்த முதல் பாகம் இன்றி இந்நூல் முழுமை அடையாது.

நண்பர்களே! இறைவனின் பெயரில் நான் உங்களிடம் வலியுறுத்திக் கூறுவ-தாவது நீங்கள் இந்த அக்கறையின்மையும் செவிசாய்க்காத தன்மையையும் விட்டு விட்டு மார்க்க விஷயங்களில் கவலையற்று இருப்பதையும் விட்டு விடுங்கள். எனது கஷ்டங்களைப் புரிந்து கொள்ளுங்கள். என்னிடம் இந்நூலின் அனைத்துப் பாகங்களும் இல்லாமல் போனால் நான் இந்நூலை வாங்க முன்வருபவர்களுக்கு, அத்தனை பாகங்களையும் அளிக்க வேண்டிய அவசியம் இருக்கும்பட்சத்தில், அவர்களிடமிருந்து பிற பகுதிகளை வெளியிடுவதற்கு அவசியமாக தேவைப்படும் முன்பணத்தை எவ்வாறு அவர்களிடம் கேட்டுப் பெற இயலும்? அதன் விளைவாக இந்த முழு பணியும் நின்று விடவும் நாம் அனைவரும் பங்கேற்க வேண்டிய மார்க்க நோக்கத்திற்கான பணி தேவையற்ற சங்கடங்களைச் சந்திக்கவும் நேரிடும்.

اُمیدوار بود آدمی بخیر کساں     مرا بخیر تو امید نیست بدمرساں

*மனிதர்கள் பிற மனிதர்களிடமிருந்து நன்மையையே எதிர்பார்க்கின்றனர். நானோ உங்களிடமிருந்து எந்த நன்மையும் எதிர்பார்க்கவில்லை.*

*மாறாக குறைந்தபட்சம் எனக்கு தீமை செய்யாமலாவது இருங்கள் என்பதே என் கோரிக்கையாக உள்ளது.*

தங்களது அறிவின்மை மற்றும் பொறுப்பின்மை நிமித்தம் மார்க்க விஷயங்களில் சரியானதொரு பார்வை இல்லாத சிலர் அறிவற்ற விமர்சனங்களின் மூலம் என்னைக் காயப்படுத்தி உள்ளனர். இந்நூலின் தயாரிப்பிற்கான செலவு ரூபாய் 9000 என்று அறிவிக்கப்பட்டபோது புத்தக வெளியீட்டுக்காக அதிக பொருட்செலவு செய்து குறைந்த விலைக்குப் புத்தகங்களைக் கொடுக்க முற்படும் பொழுது உடனடியாக தங்களது ஆதரவை அளிப்பதற்குப் பதில் பல இடையூறுகளையும் சாக்குபோக்கான பல விமர்சனங்களையும் அளிக்க முற்பட்டனர்.

ஏற்கனவே, மார்க்க சம்பந்தமான, ஏகப்பட்ட நூல்கள் இருக்கும்போது "இந்தநூலின் தேவைதான் என்ன?" என்று வினவுகின்றனர். இந்த வகையான எதிர்ப்புகள் குறித்து நான் கவலைப்படுவதில்லை.

ஏனெனில் எனக்குத் தெரியும். உலக வாழ்வையே மையமாகக் கொண்டு உள்ளவர்கள் தங்களிடமிருந்து ஒரு

சில காசுகள் செலவழிந்து விடக்கூடும் எனும் பட்சத்தில், தங்களது உள்ளங்களில் தங்களது சொந்த நோக்கங்கள் இருப்பதால் மார்க்கப் பணியை விட்டும் தவிர்த்துக் கொள்கின்றனர். ஆனால் இந்த முக்கியப் பணியினை இழிவுபடுத்துவதன் மூலம் மக்களுக்கு கிடைக்க வேண்டிய அதிக நன்மைகளை தடை பண்ணுகிற, தங்களது வழக்கம்போல, எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்த முயல்கின்றனர். எனினும், எவருமே, இவர்களது அறிவற்ற விமர்சனங்களின் காரணமாக, தவறாக வழிநடத்தப்பட்டு விடக் கூடாது என்று நான் விரும்புவதால் பராஹீனே அஹ்மதிய்யா பாகம் ஒன்றில் நான் கூறியபடி மீண்டும் கூறுகின்றேன். இந்நூல் எந்த ஒரு உண்மையான தேவையும் அவசரமும் இல்லாத நிலையில் எழுதப்படவில்லை.

வேறு ஏதேனும் ஒரு புத்தகம் இதே தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்று இருக்கும் பட்சத்தில் நான் அந்தப் புத்தகத்தை உடனடியாக ஏற்றுக் கொண்டு அந்தப் புத்தகத்தை பரவச் செய்ய என்னை அர்ப்பணித்திருப்பேன். அவ்வாறு இருப்பின், ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட வேலை ஒன்றை, மீண்டும் செய்ய முற்பட்டு, என் இரத்த வேர்வையைச் சிந்தி, பல ஆண்டுகளை, எனது வாழ்வின் பெரும் பகுதியை, வீணடித்திருப்பின் அது எனக்கு அர்த்த மற்றதாகவே இருக்கும். ஆனால் என் அறிவுக்கு எட்டிய வரையிலும் இஸ்லாம் இறைவன் புறத்திலிருந்து தோன்றிய மார்க்கம் என்பதை நிலைநாட்டும்படி தற்காலத்தில் வெளியிடப்பட வேண்டும் என நான் கருதுகின்ற, நான் சேகரித்துள்ள, அத்தனை வாதங்களையும் சான்றுகளையும் உள்ளடக்கிய ஒரு நூல் இல்லை. இந்த அவசர தேவையை சந்திக்கும்படியாக இந்த நூலை வெளியிடுவதைத் தவிர வேறு வழியை நான் காணவில்லை.

இந்நூலின் மீது ஐயம் கொள்ளுபவர்கள் இதைப் போல ஒரு நூலைக் கொண்டு வரலாம். அவ்வாறின்றி, தொடர்ந்து அறிவினமாகப் பேசிக் கொண்டு இறைவனின் படைப்புகளை இறைஅருள் எனும் ஊற்றை அடைய முடியாதபடி தடுப்பது ஒரு மாபெரும் பாவச் செயலாகும்

மேலே குறிப்பிடப்பட்ட விஷயங்கள் எனது தற்புகழ்ச்சியை வெளிப்படுத்தும்படியான எனது முயற்சி இல்லை என்று மனதில் கொள்ளுங்கள். கடந்த காலங்களில் புகழ்பெற்ற அறிஞர்கள் செய்யாத ஆராய்ச்சிகளை நான் செய்வது அவர்கள் முன்வைக்காத ஆதாரங்களை நான் முன்வைப்பது என்பது ஒவ்வொரு காலத்திற்கும் அந்தந்த காலத்திற்கேற்ப தேவைகள் உண்டு என்பதனாலேயாகும்.

இம்முயற்சி, எனது தாழ்வான நிலையை உயர்த்துவதாகவோ அவர்களது உயர்ந்த நிலையைக் குறைப்பதாகவோ ஆகாது. தீய எண்ணங்கள் மிகப் பரவலாக வளர்ந்து விட்டிராத அவர்களின் காலங்களில் பெரும்பாலும் தங்களது மூதாதையர்களிடமிருந்து சுவிகரித்துக் கொண்ட சில வழிகேடான நம்பிக்கைகளையே அவர்கள் கையாள வேண்டியது இருந்தது. அக்காலத்தின் தீமைகளைச் சரிசெய்ய அவர்களது செயல்பாடுகள் போதுமானதாக இருந்தது என்று சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. மாறாக, நாம் வாழும் தற்காலமானது, தீய நம்பிக்கைகள் வெகு தீவிரமாகப் பரவிக் கொண்டிருக்கும் காலமாக இருப்பதால் அந்தக் கால யுத்திகள் தற்காலத்திற்கு போதுமானதாக இல்லை என்பதும் நிரூபணம் ஆகி உள்ளது. தனது நோய்களைத் தீர்க்கும்படியான ஆழமான ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் தற்காலத்திற்குத் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் தேவைப்படுவது போன்று இக்காலத்திற்கும் புதிய நூல்களின் தேவை இருக்கின்றது. காரணம் யாதெனில் சில காலகட்டங்களில் சீர்கேடுகள் குறைந்து காணப்படுகின்றன. மற்ற சில காலங்களில் சீர்கேடுகள் அதிகமாகி விடுகின்றன. சில காலங்களில் ஒரு விதமாகவும் மற்ற சில காலங்களில் வேறு விதமாகவும் சீர்கேடுகள் நடைபெறுகின்றன. இவைகளைக் கருத்தில் கொண்டு தீர்வளிக்க முயலும் ஒரு நூலாசிரியர் ஒரு மருத்துவரைப் போல நோயின் தன்மையையும் அதன் தீவிரத்தையும் ஆழத்தையும் கண்டறிந்து ஒரு மிகச் சரியான மருத்துவத்தைப் பரிந்துரைக்க வேண்டும். மேலும், நோயின் தன்மை மற்றும் ஆழத்தை மனதிற் கொண்டு மிகச் சரியான வழிமுறையில் அந்த மருந்து அளிக்கப்படவும் வேண்டும்.



ஒரு நூலானது தற்கால வாசகர்களின் தேவைகளைச் சரியாகப் பூர்த்தி செய்யாது போனால் அது பிரயோஜனம் அற்றதும் செயலற்றதுமாகி, மேலும் அப்படிப்பட்ட நூல் சந்தேககுணம் உள்ளவர்களின் சந்தேகங்களை வேரறுக்கும்படி அவர்களது இதயத்தை ஊடுருவும் சக்தி அற்றதாகவும் இருந்து விடும். தற்காலத்தில் எழுந்துள்ள சீர்கேடுகளின் தன்மை அதற்கு இணையாக வரலாற்றில் எப்பொழுதுமே காண முடியாதபடி உலகை சூழ்ந்துள்ளது என்று சிறிதளவு கவனம் செலுத்தினாலே நமது விமர்சகர்களால் அறிந்து கொள்ள இயலும்.

கடந்த கால மக்கள் கண்மூடித்தனமான தவறான பின்பற்றுதலுக்குப் பலியானார்கள் என்றால் தற்காலத்தில், நாம் காணும் ஆபத்தானது, பகுத்தறிவைத் தவறாகப் பயன்படுத்துவதாக இருக்கின்றது. கடந்த கால மக்கள் அறிவற்ற நிலையில் அடிப்படையற்ற கொள்கைகளைப் பின்பற்றி சீர்கெட்டுப் போனார்கள் எனில் தற்கால மக்கள் தவறான பகுத்தறிவு மற்றும் தவறான தர்க்க ஞானத்தினால் வழிகேடுகளில் நடத்தப்படுகின்றனர். இக்காரணத்தினாலேயே இறையச்சம் உள்ள முற்கால அறிஞர்களுக்கு நாம் இக்காலத்தில் முன் வைக்கும் வாதங்களையும் பகுத்தறிவையும் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லாமல் இருந்தது. நமது காலத்தின் புதிய ஒளியானது (இது ஒளியாக இருக்கும்பட்சத்தில் ஐயோ!) புதிதாகக் கல்வி கற்பவர்களின் ஆன்மிக ஞானத்தை செயல் இழக்கச் செய்கின்றது.

இறைவனை மகிமைப்படுத்துவதற்குப் பதிலாக அவர்கள் தங்களையே மகிமைப்படுத்துகின்றனர். இறைவனது வழிகாட்டுதலை விட்டு அவர்கள் தங்களுக்கு தாங்களே சுயமாக வழிகாட்டியாக உள்ளனர். பொதுவாக இன்றைய இளைய சமுதாயம் எல்லாக் காரியங்களுக்கும் அறிவுப்பூர்வமான விளக்கங்களையும் காரணங்களையும் கண்டறிந்து, அவற்றையே சார்ந்திருக்க விரும்புகின்றார்கள். எனினும் போதிய அறிவோ ஞானமோ இல்லாது இருப்பதால் சரியாக வழிகாட்டப்படாமல் வழி தவறி விடுகின்றனர்.

வக்கிரமான எண்ணங்களும் தவறாகப் புரிந்து கொள்ளுதலும் அவர்களை சரியான முடிவெடுக்கும் சக்தியை பேரளவு முடக்கியுள்ளது. அதீத மாறுபட்ட சிந்தனைகளும் யோசனைகளும் குறைமதி கொண்ட மக்களைப் பெருங் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

வசீகரமான பேச்சாற்றலால் இளைஞர்கள் மேலும் குழப்பம் அடைந்துள்ளனர். இந்நிலையில் தெள்ளத் தெளிவாகத் தெரியக் கூடிய முழுமையான அறிவும் அறிவுப்பூர்வமான விஷயங்களும் கூட இவர்களது கண்களுக்கு சந்தேகத்திற்கு ஏதுவானதாகத் தெரிகின்றது. ஆனால் முற்றிலும் தவறான அபத்தமான விஷயங்களை முற்றிலும் உண்மை எனப் போற்றுகின்றனர். மனிதனின் கண்ணியத்திற்கு சற்றும் பொருந்தாத செயல்களை நாகரிகத்தின் உச்சமெனக் கூறுகின்றனர். ஆனால் உண்மையிலேயே நாகரிகமான நடத்தையைப் புறந்தள்ளு-கின்றனர்; கேலிக்குள்ளாக்குகின்றனர். இந்த சூழ்நிலையில், தாங்களே தங்களை ஞானிகள் என்று நினைத்துக் கொண்டு தங்களின் கூற்றுக்களைத் தாங்களே பறைசாற்றிக் கொண்டு இருக்கும் இவர்களுக்காகவே பராஹீனே அஹ்மதிய்யா எனும் இந்நூலை எழுதியுள்ளேன். இந்நூலில், தங்களது அதிக அகங்காரத்தினால் இவர்கள் முகம் திருப்பிக் கொண்ட, இறைவேதமான திருக்குர்ஆன் இறைவன் புறத்திலிருந்து வந்துள்ளது என்பதற்கு 300 மறுக்க இயலாத அறிவுப்பூர்வமான வாதங்கள் இடம் பெற்றுள்ளன. தெள்ளத் தெளிவாக தெரிவதாவது “பகுத்தறிவின்பால் லயித்து இருப்பவர் பகுத்தறிவால் திருப்தி அடைவார். மேலும் பகுத்தறிவுதான், வழிகேட்டின்பால் இட்டுச் செல்லப்பட்டவரும் திரும்பி நேரான பாதையில் நடத்தப்படுவதற்குத் தேவையாக உள்ளது என்பதே”

(தொடரும்...)

---

*(7 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மன்னித்து விட்டீர்களா என்று கேட்டார். ஆம் என்று அன்னார் கூறினார்கள். அப்போது அந்த இணைவைப்பாளராக இருந்த இக்ரிமாவின் உள்ளம் இஸ்லாத்திற்காக திறந்து விட்டது. மேலும் அவர் இந்த நல்லிணக்கம் மற்றும் நன்னடத்தையைப் பார்த்து இவ்வாறு கூறினார். முஹம்மது (ஸல்) அவர்களே! தாங்கள் இரத்த உறவை மிக்க பேணுபவராகவும் எண்ணற்ற கருணையாளரும் மிகவும் கண்ணியத்திற்குரியவரும் ஆவீர்கள். நான் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய-வன் வேறு யாருமில்லை எனவும் மேலும் முஹம்மத் (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன் என்று கூறி இஸ்லாத்தை தழுவினார். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுப்பு 3, பக்கம் 92)

அதே போன்று அந்தக் குற்றவாளிகளில் அபூசுஃபியானின் மனைவி ஹிந்தா பின்த் உத்பாவும் இருந்தாள். இவர் உஹது போரில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய பெரிய தந்தை ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சடலத்துடன் மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண்டாள். அவர்களின் மூக்கு காது மற்றும் பிற உடல் உறுப்புகளை வெட்டி சடலத்தின் உருவத்தையே சிதைத்து விட்டாள். மேலும் அவர்களின் கல்லீரலைக் கடித்து பழிவாங்குதல் என்ற நெருப்பை தணித்துக் கொண்டாள். மக்கா வெற்றிக்குப் பிறகு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெண்களிடம் பைஅத் வாங்கும்போது இந்தப் பெண்மணியும் முக்காடு அணிந்து கொண்டு அமர்ந்திருந்தாள். ஏனென்றால் அவளுடைய குற்றத்தின் காரணமாக அவளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

(தொடரும்...)

## மார்க்க சுதந்திரத்தின் நான்கு அடிப்படை உரிமைகள்

முதலாவதாக, யாரையும் தங்கள் மதத்திற்குள் கட்டாயமாகப் புகுத்த முடியாது. இரண்டாவதாக, தங்கள் சொந்த விருப்பப்படி ஒருவர் மதத்திற்குள் நுழைவதை எவராலும் வலுக்கட்டாயமாகத் தடுக்க முடியாது. மூன்றாவதாக, ஒருவர் அனைவராலும் அறியப்பட்ட மற்றும் வெளிப்படையான தனது கொள்கையைப் பின்பற்றுவதிலும், சம்பிரதாய மற்றும் வழிபாட்டை செய்வதிலும் எந்த விதமான கட்டுப்பாடும் அல்லது வற்புறுத்தலும் அனுமதிக்கப்படாது. நான்காவதாக, ஒருவர் ஒரு மார்க்கத்தில் நிலைத்திருக்க விரும்பவில்லை என்றால், அவரை அதில் நிலைத்திருக்க கட்டாயப்படுத்துவது அனுமதிக்கப்படாது, மேலும் அதில் நிலைத்திருக்க விரும்புபவரை அவ்வாறு கட்டாயமாக வெளியேற வேண்டும் என்று நிர்பந்திக்கவும் கூடாது.



# நிம்மதியான குடும்ப வாழ்க்கை என்பது குழந்தைகளின் தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த உத்தரவாதமாகும்

ராஷிதா ரஹ்மான் சாஹிபா (சத்ர் லஜ்னா, தில்லி)

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

ஹஸ்ரத் நான்காவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரஹிமஹுுல்லாஹ்) அவர்கள் 27.12.1991 அன்று காதியானில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் ஆற்றிய சொற்பொழிவில் தொடர்ந்து கூறுகிறார்கள்:

“அஹ்மதிப் பெண்கள் உண்மையிலேயே இதற்கு தகுதியானவர்களாக இருக்கின்றனர். மேலும் இவ்வுலகில் சுவர்க்கத்தின் முன்மாதிரியை உருவாக்குவதற்கும், ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கும் தகுதி படைத்தவர்களாக இருக்கின்றனர். அவர் மையச் சூழற்சியாக மாறி, அவரது வீட்டிலுள்ள நபர்கள் அவர்களைச் சுற்றி வரும் அளவுக்கு, வீட்டில் உள்ளவர்கள் வெளியில் நிம்மதியைத் தேடாமல் வீட்டில் நிம்மதி கிடைக்கும் அளவுக்கு அவர் தனது வீட்டிற்கு அத்தகைய ஈர்ப்பை வழங்க முடியும்.”

ஹஸ்ரத் நான்காவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரஹிமஹுுல்லாஹ்) அவர்கள் சொற்பொழிவில் தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்கள்:

“இரண்டாவது விஷயம் எத்தகையது என்றால், அது பெண்ணுடனும் தொடர்புடையதாக இருக்கிறது; ஆணுடனும் தொடர்புடையதாக இருக்கிறது. எந்தப் பெண்களின் காலடியின் கீழ் சுவர்க்கம் இருக்க வேண்டுமோ அந்த சில பெண்களின் காலடிகளிலிருந்து பேறிழந்த ஆண்கள் சுவர்க்கத்தைப் பறித்துக் கொள்கின்றனர். அங்கு பொறுப்பு, பெண்களுக்கு இருப்பதில்லை. மாறாக, பேறிழந்த அந்த ஆண்களின் மீது இருக்கிறது. அவர்களின் பிள்ளைகள் தாயின் காலடியிருந்து சுவர்க்கத்தைப் பெறுவதற்குப் பகரமாக நரகத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இவர்கள் வீடுகளில் தீய ஒழுங்களுடன், அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர். அவர்களுக்கு தனது மனைவிகளின் மென்மையான உணர்வுகளைப் பற்றிய உணர்வு இருப்பதில்லை. அவர்கள் தமக்கு அதிகமான உடல் அளவிலான ஆற்றல் இருக்கின்றது என்று கருதுகின்றனர். அதனால் தாம் விரும்பியது போன்று தமது மனைவியரிடம் நடந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றனர்......... இதன் விளைவாக எவ்வளவு மோசங்கள் தோன்றுகின்றன என்றால், நீங்கள் அவை பற்றி உணர்ந்தால், அது உங்களுக்கு முன்னால் வெளிப்படும் மிகப் பெரிய கருத்து ஆகும்.”

நான் ஹஸ்ரத் மூன்றாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரஹிமஹுுல்லாஹ்) அவர்களின் தனிச் சிறப்பான தூய குடும்ப வாழ்க்கையின் ஒரு காட்சியை உங்களுக்கு முன்னால் எடுத்து வைக்கிறேன். நிச்சயமாக ஹஸ்ரத் மூன்றாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரஹிமஹுுல்லாஹ்) அவர்களின் வாழ்க்கையின் இந்த நிகழ்வைக் கேட்டு நம்மில் ஒவ்வோர் அஹ்மதியின் வீடும் சுவர்க்கமாக மாறும் வழியில் இன்னும் விரைவாக வேலை செய்யும் - இன்ஷா அல்லாஹ்.

மூன்றாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரஹிமஹுுல்லாஹ்) அவர்களின் துணைவியார் சய்யிதா தாஹிரா சித்தீகா ‘ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது’ என்ற தமது நூலில் இவ்வாறு எழுகின்றார்கள்:

“ஹுுஸுூர் (ரஹிமஹுுல்லாஹ்) அவர்களுடன் என்னுடைய தொடர்பு மனைவி என்ற முறையில் வெளிப்படையில் இரண்டு மாதங்கள் என்ற மிகக் குறைந்த கால அளவே இருந்தது என்றாலும் இந்தத் தொடர்பு எந்த அளவுக்கு ஆழமாகவும், எந்த அளவுக்கு உறுதியாகவும், எந்த அளவுக்கு அன்பில் நிறைந்ததாகவும், பாசாங்கு இல்லாததாகவும் இருந்தது என்றால், இருபதுக்கும் அதிகமான ஆண்டுகளைக் கொண்ட பழைய உறவு கூட அதற்குப் போட்டி போட முடியாது. ஹுுஸுூர் (ரஹிமஹுுல்லாஹ்) அவர்கள் முதல் நாளிலிருந்து என்னிடம், பார். என்னுடன் ஒருபோதும் பாசாங்கு செய்ய வேண்டாம். பாசாங்கு இல்லாத நேரம் வரை நாம் நமது வேலையை சரியாக செய்ய முடியும். என்னிடம் உனக்கு பயிற்சி கொடுப்பதற்கு இரண்டரை மாதங்கள் மட்டுமே இருக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் Nut-ல் Screw Fit ஆகி விடுவது போன்று நான் உனக்கு முழுமையான தர்பிய்யத் கொடுக்க வேண்டும். நான் கூடிய விரைவில் தர்பிய்யதைப் பெற்று உண்மையான மார்க்கத்தின் தொண்டிற்காக ஹுுஸுூர் (ரஹிமஹுுல்லாஹ் அவர்களுக்கு முழுக்க முழுக்க உதவி செய்ய வேண்டும் என்பது அவர்களின் குறிக்கோளாக இருந்தது. அவர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்து வந்தார்கள். மேலும் நான் அவர்களின்



விருப்பத்திற்கேற்ப ஏதாவது ஒரு வேலை செய்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள் தைரியமூட்டினார்கள்."

ஹஸ்ரத் மூன்றாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் அழகிய இல்லற வாழ்க்கை பற்றி படம் பிடித்துக் காட்டியவாறு அவர்களின் மனைவி அதே நூலில் இவ்வாறு எழுகிறார்கள்:

"ஹுஸூர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் தமது வீட்டினருடன் அழகிய முறையில் நடந்து கொள்வது பெருமிதம் கொள்ளத்தக்க அளவுக்கு இருந்தது. அதைப் படம் பிடித்துக் காட்டுவதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. நாலாப்புறமும் அன்பாகவே இருந்தது. பரிவாகவே இருந்தது. அதைத் தவிர வேறேதும் இருந்ததில்லை. எவ்வளவு அன்பு, எவ்வளவு பரிவு இருந்தது என்றால், பொதுவான மனிதனால் அதைக் கணித்துக் கூடப் பார்க்க முடியாது. பல நேரங்களில் நான் வியப்பில் ஆழ்ந்து விட்டேன்....... வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் நான் பார்வையிடும்போது ஹுஸூர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் எனக்காக ஏதாவதொரு விதத்தில் வழிகாட்டிச் சென்றிருக்கிறார்கள் என்று நான் உணர்கிறேன். தொடக்கத்தில் நான் வீட்டிலுள்ளவர்களிடமும், மற்ற மக்களிடமும் சந்திக்கத் தொடங்கியபோது ஹுஸூர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பார்! ஆணவம் கொள்ளக் கூடாது; ஆயினும் நல்லொழுக்கத்துடன் இருக்க வேண்டும் என்று எனக்கு அறிவுரை கூறினார்கள்."

தொடர்ந்து சய்யிதா தாஹிரா சித்தீகா அவர்கள் எழுதுகிறார்கள்:

"சுருக்கமாக, எனது மிக உயரிய தர்பிய்யத்தை எல்லா நேரத்திலும் கவனத்தில் கொண்டார்கள். உலகம் எங்கு பார்த்தாலும் ஒளிர்தலையே பார்க்கும் அளவுக்கு நான் இந்த வைரத்தை ஆயிரக்காணக்கான கோணத்தில் ஒளிர வைக்க விரும்புகிறேன் என்று ஒருமுறை தைரியமூட்டும் வகையில் கூறத் தொடங்கினார்கள். பிறகு இந்த மனிதரின் வாழ்க்கையில் இரண்டு பெண்கள் வந்தனர். இரண்டுமே மகத்தானவர்கள் என வரலாறு எழுத வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று கூறினார்கள். தன் மனைவியின் தர்பிய்யத்திற்காக ஒவ்வொரு கணவனின் உள்ளத்தில் இவ்வளவு உயர்ந்த, உயரிய ஆசைகள் உருவாகி விட்டால், பிறகு பெண்களின் தர்பிய்யத்தின் பிரச்சனைகளே எஞ்சியிருக்காது என்று நான் சிந்திக்கிறேன். ஏனெனில் மனைவி, தன் கணவரை தன்னை விட அதிகமாக மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்க்க விரும்புகிறாள் என்பது பெண்ணின் இயல்பில் காணப்படுகிறது. அவளுக்கு முழுமையான அன்பைக் கொடுத்தால் நிச்சயமாக அவள் கணவரின் மகிழ்ச்சிக்காக எல்லா விஷயங்களையும் செய்ய ஆயத்தமாகி விடுகிறாள். பிறகு அவளை சரியான வழியின் பக்கம் வழிகாட்டுவது கணவரின் பணியாகும். اَلرِّجَالُ قَوّٰمُوْنَ عَلَى النِّسَآءِ (அர்ரிஜாலு கவ்வாமூன அலன் நிஸாயி - ஆண்கள் பெண்களுக்கு காப்பாளர்களாக இருக்கின்றனர் 5:35) என்பதன் பொருள் இதுவே ஆகும்." (நூல்: மிர்ஸா நாஸிர் அஹ்மது பக்கம் 82-84)

நான் ஹுஸூர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் தாஹிரா அக்கா அவர்கள் மூலமாக பெண்களுக்குக் கொடுத்திருந்த இறுதித் தூதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஹஸ்ரத் மூன்றாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"இஸ்லாத்தின் வெற்றிக்கு ஆயத்தமாவதற்காக தங்களுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும்; குழந்தைகளுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும் என்ற அறிவுரையை பெண்களுக்கு அறிவுரை கூற வேண்டும். மேலும் இஸ்லாம் வெற்றி பெறும் பாதையில் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும் என்ற விஷயத்தை நன்றாகக் கூறுங்கள்." (மிர்ஸா நாஸிர் அஹ்மது பக்கம் 4)

நம்பிக்கை கொண்டவர்களின் தலைவர் சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது கிலா.்.பத் காலகட்டத்தின் தொடக்கத்திலிருந்தே பல சந்தர்ப்பங்களில் அன்றாட குடும்ப வாழ்க்கை தொடர்பான பிரச்சனைகள், அவற்றிற்கான தீர்வு ஆகியவற்றிற்காகவும் அறிவுரைகளையும், வழிகாட்டுதல்களையும் கூறிக் கொண்டு வருகிறார்கள். ஒவ்வோர் அஹ்மதியின் வீடும் சுவர்க்கத்திற்கு நிகரான அமைதி, சாந்தியின் இடமாக ஆகி விட வேண்டும் என்பது அவர்களின் உள்ளத்திலுள்ள துடிப்பு ஆகும். ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

"எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதாக வாதம் செய்யும் நாம் நம்மிடம் புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கும் மிகப் பெரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. நமது வீடுகளையும் சுவர்க்கத்திற்கு நிகரானதாக ஆக்குங்கள். அல்லாஹ் நம்மிடம் நம்பிக்கை வைத்திருக்கின்ற அத்தகைய இறையச்சத்தை உங்கள் சுற்றுப் புறங்களிலும் உருவாக்குங்கள். இறைவனின் நற்செய்தியை நம்மிடமிருந்து விலக்கி விடுகின்ற அப்படிப்பட்ட எந்தவொரு செயலும் நடக்கக் கூடாது. எனவே துஆக்களில் மிகவும் அழுத்தம் கொடுப்பது நம் மீது மிகப் பெரிய பொறுப்பு ஆகும். ஏனெனில் இஸ்லாமிய உலகத்தின் பாதுகாப்பிற்கு அனைவரையும் விட அதிகமான பொறுப்பு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது இருக்கிறது." (ஜுமுஆ பேருரை 16.5.2003. குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 1 பக்கம் 41).




சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 2004-ஆம் ஆண்டு நைஜீரியா ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்கள்:

"பெண்களுக்கு இஸ்லாமிய சமூகத்தில் ஓர் உயரிய அந்தஸ்து இருக்கிறது என்பதை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ளட்டும். அவர்கள் தமது அந்த உயரிய அந்தஸ்தை அடையவில்லை என்றால், வருங்காலத்தில் அவர்களின் தலைமுறைகள் நிலைபெற்றிருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. பெண்கள் தமது அந்தஸ்த்தைப் புரிந்து கொள்ளுங்கள். இல்லையென்றால், அவர்கள் தமது கணவர்களுக்கும், வருங்கால தலைமுறைகளுக்கும் மாறு செய்பவர்கள் ஆவார்கள். அவர்களுக்கான

உரிமையை நிறைவேற்றாதவர்களாகக் கருதப்படுவார்கள். மேலும் எல்லாவற்றையும் விட அதிகமாக தன் படைப்பாளனுக்கு நன்றி கெட்ட செயலை செய்பவர்களாகி விடுவார்கள். எனவே அஹ்மதி பெண் தனது சீரதிருத்தத்தின் பக்கம் கவனமாக இருப்பதும், அல்லாஹ் தனக்கு வழிகாட்டல் வழங்குவானாக என்று எப்போதும் துஆ செய்து கொண்டிருப்பதும், தனது சந்ததிகளை இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப வளர்க்கும் அளவுக்கு தன்னை தகுதியானவர்களாக ஆக்கிக் கொள்வதும் மிக முக்கியமானவையாகும்."

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 2006-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா ஆண்டு மாநாட்டில் பெண்களின் அந்தஸ்து மரியாதையைப் பாதுகாப்பது தொடர்பாக அறிவுரை கூறியவாறு இவ்வாறு கூறினார்கள்:

"உங்களின் பிள்ளைகளை இவ்வுலகிலும் சுவர்க்கத்தின் வாரிசாக்கக் கூடியது உங்களின் தர்பிய்யத்தான். மேலும் மறுவுலகிலும் இந்தச் செயல், உயர்ந்த தர்பிய்யத் என்பது பிள்ளைகளை எல்லா நேரமும் இறைவனுடன் தொடர்புடையவர்களாக ஆக்கி வைக்கும். மேலும் பிள்ளைகளிடமும் துஆ செய்யும் பழக்கம்



உருவாகும். மேலும் பிள்ளைகளின் இந்த துஆக்கள் மறுவுலகில் உங்களை சுவர்க்கத்தின் மிய உயர்ந்த படித்தரங்கள் வரை கொண்டு செல்வதற்குக் காரணமாகிக் கொண்டிருக்கும்....... சில தாய்மார்கள் தம் குழந்தை -களுக்காக தியாகங்கள் செய்கின்றனர். அஹ்மதி பிள்ளைகளின் தாய்மார்கள் தமது பொறுப்புகளைப் புரியக் கூடியவர்களாக இருந்து வந்தால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வருங்கால சந்ததிகள் அல்லாஹ்வுடன் இணைந்திருப்பவர்களாக இருப்பார்கள் - இன்ஷா அல்லாஹ். பெண்களின் காலடிகளின் கீழ் சுவர்க்கம் இருக்கிறது என்ற கண்ணியத்தை அல்லாஹ் பெண்களுக்கு வழங்கி இருக்கிறான். அது எதனால் என்றால், அவர் தியாகம் செய்து கொண்டே இருக்கிறார். எந்த பெண்கள் தமது ஆசைகளை தியாகம் செய்கின்றார்களோ அவர்களின் காலடியிலேயே சுவர்க்கம் இருக்கிறது."

நிம்மதியான வாழ்க்கையை நடத்துவது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நமக்கு வழிகாட்டியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

"எந்த வீடுகளில் தாய், தந்தையர் பரஸ்பரம் அன்புடனும், நேசத்துடனும் நடந்து கொள்வதில்லையோ அவர்களின் பிள்ளைகள் அதிகமாக வெளியே சென்று நிம்மதியைத் தேடுகின்றனர் என்பது எனது ஓர் ஆய்விலிருந்து தெரிய வந்த விஷயமாகும். எனவே நான் தாய், தந்தையரிடம் கூறுவேன்: நீங்கள் உங்களின் 'தான்' என்ற அகந்தைகளின் காரணமாகவும், அற்பமான காரணங்களுக்காகவும் வீடுகளின் நிம்மதிகளை நாசமாக்கி உங்கள் சந்ததிகளை பாழாக்கி விடாதீர்கள். மேலும் உண்மையான முறையில் இறையச்சமுடையவர்களுக்கு இமாமாகுவதற்கும், உங்களின் அமானிதங்களின் உரிமையை நிறைவேற்றுபவர்களாகு -வதற்கும் முயற்சி செய்யுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்து நீங்கள் செய்த உங்களின் உறுதிமொழிகளையும், வாக்குறுதிகளை -யும் நிறைவேற்றுங்கள்."

மேலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

"பெண்களின் ஆசைகளை நிறைவேற்ற முடியவில்லை என்பதற்காக சில வீடுகள் சீரழிந்து விடுகின்றன.......... ஒரு பெண், தனது வீட்டின் நிம்மதியையும், அமைதியையும் எவ்வாறு பெறுவது? தனது வீட்டை சுவர்க்கத்திற்கு நிகரானதாக எவ்வாறு ஆக்குவது என்று சிந்திப்பவர்தான் அறிவுள்ள மனைவி ஆவார். அவருக்கு உலகத்தின் பக்கம் பார்வை இருக்குமென்றால், இந்த நிம்மதி அவருக்கு ஒருபோதும் கிடைக்க முடியாது. உண்மையான நிம்மதி அல்லாஹ்வுடன் தொடர்பை உருவாக்குதன் மூலமாக கிடைக்க முடியும். நீங்கள் ஆய்வு செய்து பார்த்தால், இறைவனுடைய திருப்தியைப் பெறுவதற்காக நல்ல செயல்களை செய்யும் பெண்களின் வாழ்க்கையில் இருக்கும் அமைதியும், நிம்மதியும் உலகவாதியான பெண்ணின் வாழ்க்கையில் இருப்பதில்லை. உலகவாதிகளாக இருக்கும் வீடுகளில் நிம்மதியின்மை காணப்படுகிறது. ஆனால் மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுக்கின்ற பெண்களுக்கு, அதற்காக தியாகங்கள் செய்கின்ற பெண்களுக்கு வீடுகளிலும் நிம்மதி இருக்கிறது. அவர்களின் குடும்ப வாழ்க்கையும் மகிழ்ச்சியாகவும், இன்பமாகவும் இருக்கிறது. அவர்களின் பிள்ளைகளும் நன்மைகளில் நிலைபெற்றிருக்கின்றனர். ஜமாஅத்துடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்கின்றனர்." (ஜெர்மனி 2012 ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய பேருரை).

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது M.A (ரலி) அவர்கள் அஹ்மதி தாய்மார்களை விளித்து உருக்கமாக இவ்வாறு கூறுகிறார்கள்:

"எனவே அஹ்மதி தாய்மார்களே! உங்களுக்கு ஒரு மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. உங்களின் கைகளில் சிறு பிள்ளைகள் வளர்கின்றனர். அவர்கள் இன்றைய இளைஞர்கள் ஆவர். இன்றைய மகன்கள் நாளைய தந்தையர்களாக இருக்கின்றனர். இன்றைய கட்டுப்படக் கூடியவர்களாக இருக்கின்றவர்கள், எதிர் காலத்தில் பின்பற்றப்படக் கூடியவர்களாக இருக்கின்றனர். இன்றைய ஆட்சிக்குட்பட்டவர்களாக இருக்கின்றவர்கள், எதிர் காலத்தில் ஆட்சியாளர்களாக இருக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். கூடிய விரைவில் அவர்களின் கைகளில் ஜமாஅத்தின் பணிகளின் அதிகாரம் வழங்கப்படும். எனவே உங்களின் இந்த நுட்பமான பொறுப்பை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

அவர்களின் காலம் வரும்போது அவர்கள் வானத்தின் நட்சத்திரங்களாக மிளிரும் அளவுக்கு உங்கள் குழந்தைகளின் வாழ்க்கையை வடிவமையுங்கள். (தாய்மார்களாகிய) நீங்களும் உங்களின் அந்தஸ்தை கண்டறிவதில்லை. ஆனால் உங்களுடைய ரஸூல் (ஸல்) அவர்கள் உங்களின் அந்தஸ்தைக் கண்டறிந்து கொண்டார்கள். மேலும் உங்களை தம்முடைய அன்பிற்குரியவர்களாகக் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே நீங்கள் இறைவனுடைய அன்பிற்குரியவர் (ஆகிய நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய அன்பிற்குரியவர்கள் ஆவீர்கள் என்ற உங்களது அந்த மகத்தான அந்தஸ்தைப் புரிந்து கொள்ளுங்கள். இறைவன் உங்கள் தோள்களின் மீது சுமத்தியுள்ள அந்தப் பொறுப்பை நிறைவேற்றுங்கள். இந்தப் பொறுப்பு மிகவும் பெரியதாகும். ஆனால் இந்த வழியின் ஒவ்வோர் அடியிலும் இறைவனுடைய அருள் மற்றும் கருணையின் நிழல் உங்கள் மீது இருக்கும் என்று உறுதி கொள்ளுங்கள். அவனுடைய ரஸூலின், அவனுடைய மஸீஹ் (அலை) அவர்களின் தூய துஆக்கள் உங்களுடன் செல்லும். எங்களைப் படைத்தவனும், அதிபதியும் ஆகிய வானத்தின் எஜமானனே! எங்களின் பலவீனமான கப்பல்களின் ஆற்றல் மிக்க இறைவா! ஒவ்வோர் அஹ்மதியின் தாயின் உள்ளத்திலும், நான் என் குழந்தைகளை உனது தூய்மையான அமானிதமாகக் கருதியவாறு, உனது போதனை, தர்பிய்யத் ஆகியவற்றை உனது திருப்தி, இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருக்கும் அத்தகைய அடிப்படைகளில் நிலைநிறுத்தி விடக்கூடிய உணர்வை உருவாக்கி விடுவாயாக. மேலும் அஹ்மதி பிள்ளைகளும் தம் தாய்மார்களின் தர்பிய்யத்தின் விளைவுகளை, நல்ல ஒழுக்கமுள்ள பிள்ளைகளைப் போன்று ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை நீ வழங்குவாயாக." (நூல்: நல்ல தாய்மார்கள்).

அல்லாஹ்வின் அருளினால் முழு உலகத்திலும் ரஹ்மத்துல் லில் ஆலமீன் (அனைத்துலகங்களின் அருட்கொடை) ஆக இருக்கும் நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருகின்ற அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் இஸ்லாமிய போதனையின்படி செயல்பட்டு இந்த சுவர்க்கத்தை எங்கள் வீடுகளில் உருவாக்கி விட்டோம் என்பதை நாவினால் மட்டுமின்றி, நமது செயலினாலும், அன்பினாலும் நாங்கள் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் உண்மையான ஊழியராக நெஞ்சுரத்துடன் கூறிக் கொள்வது மட்டுமின்றி, காலத்தின் இமாம் ஆகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக ஒரு புதிய வாழ்க்கையும், புதிய இறைஞானமும் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்ற அந்த சிறப்பையும் அல்லாஹ் எங்களுக்கு வழங்கியுள்ளான் என்பதையும் உலகத்தில் நிரூபித்துக் காட்டிவிட வேண்டியது அஹ்மதி முஸ்லிம்களாகிய நமது முதன்மையான கடமையாகும்.

இப்போது நாம் நமது காலத்தின் இமாம் அவர்களிடம், நம்பிக்கை கொண்டவர்களின் தலைவர் அவர்களே! நாங்கள் உங்களின் எல்லா குரல்களுக்கும் முன்னால் வந்து நின்று விட்டோம் என்று கூறியவாறு, உங்களின் எதிர்பார்ப்பு-களுக்கு ஏற்ப உலகத்தின் இருள்களிலிருந்து வெளியேறி இஸ்லாத்தின் ஒளிமிக்க ஆன்மிக முன்னேற்றப் பாதையில் நடந்தவாறு, எங்கள் வீடுகளில் சுவர்க்கத்தை உருவாக்கி விட்டோம். மேலும் இறுதி மூச்சு வரை இஸ்லாமிய உலகத்தின் திசையை இந்த ஒளிமிக்க ஆன்மிக முன்னேற்றப் பாதையின் பக்கம் திருப்புவதற்கு முயற்சி செய்து கொண்டிருப்போம் என்று உறுதிமொழி எடுத்தவாறு செல்வோம். ஏனெனில் இதைத் தவிர உலகத்தையும், மறுமையையும் சீரமைப்பதற்கு வேறு எந்த உத்தரவாதமும் இல்லை. அல்லாஹ் அழகிய முறையில் இந்த உறுதிமொழியை நிறைவேற்றும் நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக. (ஆமீன்).

رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ ؕ
اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ

(ரப்பனா வஆத்தினா மாவஅத்தனா அலா ருஸுலிக வலா துக்ஸினா யவ்மல் கியாமா. இன்னக லா துக்லி.ஃபுல் மீஆது).

பொருள்: எங்கள் இறைவா! உன் தூதர்கள் மூலமாக எங்களுக்கு வாக்களித்தவற்றை எங்களுக்கு வழங்குவாயாக. மேலும் மறுமை நாளில் எங்களை அவமானப்படுத்தி விடாதிருப்பாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதியை மீறுவதில்லை. (திருக்குர்ஆன் 3:195).

உருது கவிதையின் பொருள்:

**வெளியிலுள்ள ஆசையும், ஈர்ப்பும் வந்து சென்று கொண்டிருக்கும். உண்மையான செல்வம் வீட்டில்தான் இருக்கிறது.**

**ஒவ்வோர் எரியும் வெயிலிலும் எனக்கு நிழல் தருவது அந்த உண்மையான வீட்டில்தான்.**

**உலகில் எத்தனையோ ஆண்டுகளை செலவிட்ட பிறகு, இறுதியில் தெளிவான உண்மை இதுதான்.**

**துன்பம் வீட்டிலிருந்து வெளியில் இருந்தாலும், அதற்கான நிவாரணமும், சமாதானமும் வீட்டில்தான் இருக்கிறது.**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மூன்று துஆக்கள் இறைவனிடம் கண்டிப்பாக ஒப்புக் கொள்ளப்படுகின்றன. (1) அநீதிக்கு உட்படுத்தப்பட்ட நபர். அநீதியிழைப்பவரால் துன்பத்திற்குள்ளாகி இறைவனை அழைப்பவர். (2) பயணியின் துஆ. அவர் பயணத்தின் துன்பங்களால் சூழப்பட்டு இறைவனிடம் துஆ செய்கின்றார். (3) தன் பிள்ளைகளுக்காக துடிதுடித்தவாறு குழந்தைகளின் நன்மைக்காக செய்யும் துஆ. (திர்மதி கிதாபுத் தஃவாத்)

# வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆன்மிக நிலை



## மதிப்பிற்குரிய முனீர் அஹ்மத் காதிம் சாஹிப் (எடிட்டர் பத்ர் வார இதழ் காதியான்)

✧ ✧ ✧ தமிழாக்கம்: மவ்லவி S. அப்துல் காதிர் ✧ ✧ ✧

يُسَبِّحُ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ الْمَلِكِ الْقُدُّوْسِ الْعَزِيْزِ الْحَكِيْمِ

هُوَ الَّذِىْ بَعَثَ فِى الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۗ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِىْ ضَلٰلٍ مُّبِيْنٍ ۙ

وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ؕ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

வானங்களிலும், பூமியிலுமுள்ளவையெல்லாம் அரசனும், தூயவனும், வல்லமையுள்ளவனும், நுண்ணறிவுள்ளவனுமாகிய அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரைக்கின்றன.

அவனே எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கு - அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்த போதிலும் - அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும், நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான்.

மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்-கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமை மிக்கவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான். (62:1-4)

இந்த வசனங்களின் விளக்கத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸை ஆதாரமாகக் குறிப்பிட்டு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்: "இந்த வசனத்தின்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சல்மானின் தோளில் கை வைத்துக் கூறினார்கள்:

இது என்னைப் பற்றிய ஒரு முன்னறிவிப்பாகும், ஏனெனில் எல்லாம் வல்ல இறைவன் இந்த முன்னறிவிப்பை பராஹீனே அஹ்மதியாவில் உறுதிப்படுத்தியுள்ளான். அதே ஹதீஸ் எனக்கு ஒரு வஹியாக வெளிப்படுத்தப்பட்டது. மேலும் இந்த வஹியின் அடிப்படையில் எனக்கு முன் வேறு யாரும் இதற்கு பொருத்தமானவர் இல்லை. மேலும் இறைவனின் வஹி என்னை இந்த ஹதீஸுக்கு பொருத்தமாக ஆக்கியது. இறைவனுக்கே புகழனைத்தும். (ஹகீகத்துல் வஹீ பக்கம்391 அடிக்குறிப்பு)

பாரசீக மனிதரும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் திருக்குர்ஆனில் وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ؕ என்பதில் குறிப்பிடப்-பட்டுள்ளபடி ஒரே நபரின் பெயர்களாகும். அதாவது, நபி (ஸல்) அவர்களின் தோழர்களில் இன்னும் தோன்றாத மற்றொரு பிரிவும் உள்ளது. நபித்தோழர்கள் என்பவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்தவர்கள் என்பதும், அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட நிலையில், அவர்களிடமிருந்து போதனை மற்றும் தர்பிய்யத் பெற்றவர்கள் தான் சஹாபிகள் என்பதும் வெளிப்படையானது. எனவே இது வரவிருக்கும் மக்களிடையே ஒரு நபி தோன்றுவார் என்பதை நிரூபிக்கிறது. அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வெளிப்பாடாக இருப்பார், எனவே அவரது தோழர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்கள் என்று அழைக்கப்படுவார்கள். மேலும், ஸஹாபிகள் (ரலி) வல்லமையுள்ள இறைவனின் பாதையில் தங்களுக்கே உரிய முறையில் மார்க்க சேவைகளைச் செய்தது போல, இவர்களும் நிச்சயமாக அவற்றைத் தங்களுக்கே உரிய வழிமுறையில் செய்வார்கள். எவ்வாறு இருப்பினும், இந்த வசனம் இறுதி நாட்களில் ஒரு நபியின் தோற்றம் குறித்த முன்னறிவிப்பாகும், இல்லையெனில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு பிறக்கவிருந்த ஒரு சமூகத்தை அல்லாஹ்வின் தூதரின் தோழர்கள் என்று அழைக்க எந்தக் காரணமும் இல்லை. அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பார்த்தது கூட இல்லை. மேற்கண்ட வசனத்தில், 'வஆகரீன மினல் உம்மத்தி' என்று கூறப்படவில்லை, மாறாக, 'வஆகரீன மின்ஹும்' என்று கூறப்பட்டுள்ளது. மேலும், 'மின்ஹும்' என்பது தோழர்களை நோக்கியே உள்ளது என்பதை அனைவரும் அறிவார்கள். எனவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பிரதிபலிக்கும் ஒரு தூதர் இருக்கும் அந்த ஒரு பிரிவு மட்டுமே 'மின்ஹும்' என்பதில் பொருந்த முடியும். (ததிம்மா ஹகீகத்துல் வஹீ)

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், 'வஆகரீன மின்ஹும்' என்ற குர்ஆன் வசனத்தின் விளக்கத்தில், ஸஹீஹ் புகாரியைப் பற்றிக் குறிப்பிட்டு, "நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான நிழலும் அவர்களைப் பிரதிபலிக்கும் நபியும் ஆவேன்" என்று

கூறினார்கள். இவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மட்டுமல்ல, உம்மத்தின் முந்தைய பெரியவர்களும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிலை மற்றும் அந்தஸ்து குறித்து இது போன்ற முன்னறிவிப்புகளைச் செய்துள்ளனர். ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்தஸ் தெஹ்லவி கூறுகின்றார்கள்:

மகிமையில் மிகப் பெரிய தீர்க்கதரிசி மற்றொரு வகையான வருகையும் கொண்டிருப்பவரே. மேலும் இந்த இரண்டாவது வருகையின்மூலம், வல்லமையுள்ள அல்லாஹ் அனைத்து மக்களையும் இருளிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருப்பார் என்றும், அவருடைய சமுதாயமே அனைத்து மக்களுக்காகவும் எழுப்பப்பட்ட அனைத்து சமுதாயங்களையும் விட சிறந்ததாக இருக்கும் என்றும் பொருள். எனவே, இந்த நபியின் முதல் வருகையை இரண்டாவது வருகை உறுதியாகக் கடைபிடித்தவாறே இருக்கும்.


ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்தஸ் தெஹ்லவி, வரவிருக்கும் இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நிலை மற்றும் அந்தஸ்தைப் பற்றி குறிப்பிடுகையில், தனது ‘அல் கைருல் கஸீர்’ என்ற புத்தகத்தில் கூறுகிறார்கள்.

முஹம்மதிய உம்மத்திற்கு வரவிருக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இமாம் மஹ்தி, தூதர்களின் எஜமானர் (ஸல்) அவர்களின் ஒளியைப் பிரதிபலிக்கும் உரிமையைப் பெற்றுள்ளார். வாக்களிக்கப்பட்ட மஸீஹ், இமாம் மஹ்தி வரும்போது, அவர் உம்மத்தின் ஒரு சாமானிய உறுப்பினராக மட்டுமே இருப்பார் என்று பொதுவாக மக்கள் கருதுகிறார்கள். அப்படியல்ல. அவர் ‘முஹம்மது’ என்ற விரிவான பெயரின் முழுமையான விளக்கமாக இருப்பார். மேலும் அவர்களின் உண்மை நகலாக இருப்பார். எனவே அவருக்கும் உம்மத்தின் ஒரு பொதுவான உறுப்பினருக்கும் இடையே ஒரு பெரிய வித்தியாசம் இருக்கும்.

ஹஸ்ரத் இமாம் அப்துர் ரஸாக் காஷானி (ரஹ்) கூறுகின்றார்கள்:

இறுதி நாட்களில் வரவிருக்கும் மஹ்தி, ஷரீஆத் சட்டங்களில் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிந்தவராக இருப்பார். ஆனால் அறிவிலும், ஞானத்திலும், உண்மையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர அனைத்து இறைநேசர்களும் புனிதர்களும் மஹ்திக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருப்பார்கள். ஏனெனில், மஹ்தியின் உள்ளியல்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளியல்பு ஆகும். வரவிருக்கும் இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உண்மையான நிலை என்னவென்றால், அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிபூரண வெளிப்பாடாக இருப்பார். எனவே, இந்த முழுமையான வெளிப்பாடு முந்தைய நபிமார்களின் முன்னறிவிப்புகள் மற்றும் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் உட்பட அனைத்திலும் துல்லியமாக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் தோற்றத்தில் ஒத்துப் போகிறது. அவர்கள் அதை வல்லமையுள்ள இறைவனின் அருள்களே காரணம் என்று சுட்டிக் காட்டி அறிவித்தார்கள். இறைவன் என்னை அனுப்பி, தனது சிறப்பான இல்ஹாம் மூலம் மர்யமின் மகன் மஸீஹ் இறந்து விட்டார் என்பதை எனக்கு வெளிப்படுத்தியுள்ளான். எனவே, “மஸீஹ் இப்னு மர்யம் ரஸூலுல்லாஹ் இறந்து விட்டார், வாக்குறுதியின்படி அவரது சாயலில் நீர் வந்துள்ளீர்” என்பது அவனது இல்ஹாமாகும்.

அல்லாஹ்வின் வாக்குறுதி நிறைவேறியே தீரும். எனவே நீர் என்னுடன் இருக்கிறீர். மேலும் நீர் தெளிவான சத்தியத்தின் மீது இருக்கிறீர். மேலும் நீர் உதவி செய்பவராகவும் இருக்கிறீர். மேலும் நீர் சரியான பாதையில் இருக்கிறீர். (இஸாலே அவ்ஹாம் பக்கம் 302)



இறைவஹியின் மூலம், தொடக்கத்திலிருந்தே உம்மத்திற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹும், இஸ்லாத்தின் வீழ்ச்சி மற்றும் வழிகேடு பரவுகின்ற காலத்தில் இறைவனின் விதியில் நியமிக்கப்பட்ட இறுதி மஹ்தியும், அவனிடமிருந்து நேரடி வழிகாட்டுதலைப் பெற்று, இந்த ஆன்மிக உணவுத்தட்டை மனிதகுலத்திற்கு புதிதாக வழங்குபவர் என்பது எனக்கு தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. இதற்கான நற்செய்தி இன்றிலிருந்து 1300 ஆண்டுகளுக்கு முன்பு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கினார்கள். அது நான்தான். இறைவனின் உரையாடல்களும், கருணை நிறைந்த உரைகளும் மிகவும் தெளிவாகவும், தொடர்ச்சியாகவும் இருந்ததால், அவற்றில் யாதொரு சந்தேகத்திற்கும்

இடமில்லை. வந்த ஒவ்வொரு வஹியும் இதயத்தில் பதிந்த எ஼கு ஆணியைப் போல இருந்தது, மேலும் இந்த இறைஉரையாடல்கள் அனைத்தும் அத்தகைய மகத்தான முன்னறிவிப்புகளால் நிரம்பியிருந்தன. அவை பகல் வெளிச்சத்தைப் போல நிறைவேறின. அவற்றின் அதிக எண்ணிக்கை, மிகுதி மற்றும் அற்புத சக்திகளின் வெளிப்பாடுகள் ஆகியவை இவை ஒப்பற்ற ஓரிறைவனின் வார்த்தைகள்தான் என்பதை ஒப்புக் கொள்ள என்னைக் கட்டாயப்படுத்தின. புனித குர்ஆனும் அதே இறைவனின் வார்த்தைகள்தான். (தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன் பக்கம் 1,2,22)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், 'வஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம்' என்ற வசனத்தின்படி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முழுமையான பிரதிபலிப்பாக இருப்பதால், அவர்களின் காலத்தில், நபி (ஸல்) அவர்களின் அற்புதங்கள் மழையைப் போலப் பொழியும் என்று கூறினார்கள். அவர்களது காலத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய அற்புதங்கள் மழையைப் போலப் பொழிந்தன என்பது உண்மை என்பதால், இதுவே அவர்களின் உண்மைத் தன்மைக்கு மகத்தான சான்றாகும்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: இந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், முழுமையான வழிகேட்டிற்குப் பிறகு, நேர்வழியும் ஞானத்தையும் பெற்று, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களையும் அருள்களையும் காணும் மக்கள் இரண்டு பிரிவினர் மட்டுமே ஆவர். முதலாவதாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்பு ஆழ்ந்த இருளில் இருந்த அவர்களின் தோழர்கள்; பின்னர், வல்லமையுள்ள அல்லாஹ்வின் அருளால், அவர்கள் நபித்துவ காலகட்டத்தைப் பெற்றனர். தங்கள் கண்களால் அற்புதங்களைக் கண்டனர். முன்னறிவிப்புகளைக் கண்டனர். மேலும் ஒரே ஒரு ஆன்மா மட்டுமே இருப்பது போல் அவர்களுக்குள் (யக்கீன் எனும்) நம்பிக்கை ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனத்தின்படி, இரண்டாவது பிரிவினர், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பிரிவினர் ஆவர். இவர்களும் நபித்தோழர்களைப் போலவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களைக் காண்பார்கள். மேலும் இருள் மற்றும் வழிகேட்டிற்குப ்பிறகு நேர்வழியில் நடத்தப்-படுவார்கள். 'ஆகரீன மின்ஹும்' என்ற வசனத்தில், 'மின்ஹும்' என்ற செல்வத்தில் ஒரு பங்கு, அதாவது, தோழர்களைப் போல இருப்பதற்கான பாக்கியம் வழங்கப்பட்டுள்ளது. இது இந்த வசனத்திற்கான ஒரு குறிப்பு. அதாவது தோழர்கள் (அல்லாஹ் அவர்களைப் பற்றி மகிழ்ச்சியடையட்டும்) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களைக் கண்டு முன்னறிவிப்புகள் நிறைவேறுவதைப் பார்த்தது போல, அவர்களும் அவற்றைக் காண்பார்கள். மேலும் இடைக்காலத்தினர் இந்த அருளில் முழுமையாகப் பங்கெடுக்க மாட்டார்கள்.

எனவே, 1300 ஆண்டுகளுக்குப் ்பிறகு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களுக்கான கதவு மீண்டும் திறக்கப்பட்டது, மேலும் தாரே குத்னியின் ஹதீஸ் மற்றும் இப்னு ஹஜரின் ஃபத்வாகளின்படி ரமலானில் சூரிய, சந்திர கிரகணங்கள் ஏற்பட்டதை மக்கள் தங்கள் கண்களால் கண்டனர். அதாவது, சந்திர கிரகணமும் சூரிய கிரகணமும் ஒரு ரமலானில் நிகழ்ந்தன, மேலும் ஹதீஸின் கருப்பொருளின் அடிப்படையில், சந்திர கிரகணம் அதன் கிரகணத்திற்குரிய நாட்களில் முதல் இரவிலும், சூரிய கிரகணம் அதன் கிரகணத்திற்குரிய நாட்களில் நடுப்பகலிலும் நிகழ்ந்தது, மஹ்தி என்று தன்னை வாதிப்பவர் இருந்த நேரத்தில் இவை நிகழ்ந்தன. மேலும் இது வானங்களும் பூமியும் படைக்கப்பட்டதிலிருந்து ஒருபோதும் நடந்ததில்லை. வரலாற்றில் இதற்கான முன்னுதாரணத்தை யாராலும் நிருபிக்க முடியாததால், இது மக்கள் தங்கள் கண்களால் கண்ட மாநபி (ஸல்) அவர்களின் ஓர் அற்புதமாகும். பின்னர், மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் தோன்றிய வால் நட்சத்திரத்தை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டனர். அதே போல், ஜாவாவின் நெருப்பை மில்லியன் கணக்கான மக்கள் கண்டனர். அதே போல், பிளேக் பரவுவதையும் ஹஜ்ஜிற்குத் தடை விதிக்கப்பட்டதையும் அனைவரும் கண்டனர். நாட்டில் இரயில்கள் பயன்பாட்டுக்கு வருதல், ஒட்டகங்கள் கைவிடப்படுதல், இவை அனைத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்கள் ஆகும். அந்தக் காலத்தில் நபித்தோழர்கள் (அல்லாஹ் அவர்களைப் பற்றி மகிழ்ச்சியடையட்டும்) அற்புதங்களைக் கண்டது போலவே இவை காணப்பட்டன. இந்தக் காரணத்திற்காக, வல்லமையுள்ள அல்லாஹ் இந்த கடைசி பிரிவினரை 'மின்ஹும்' என்ற வார்த்தையால் அழைத்தான், அற்புதங்களைக் கவனிப்பதில், அவர்களும் தோழர்களைப் போலவே இருக்கிறார்கள் என்பதைக் குறிக்க அவ்வாறு செய்தான். யோசித்துப் பாருங்கள். 1300 ஆண்டுகளில் இது போன்ற நுபுவ்வத்தின் பாதையின் காலகட்டத்தை வேறு யார் அனுபவித்திருக்கிறார்கள்? நமது ஜமாஅத் உருவாக்கப்பட்ட இந்தக் காலகட்டத்தில், இந்த ஜமாஅத் பல வழிகளில் நபித்தோழர்களைப் போலவே இருக்கிறது. (அல்லாஹ் அவர்களைப் பற்றி மகிழ்ச்சியடையட்டும்). நபித்தோழர்கள் செய்தது போல் அவர்கள் அற்புதங்களையும் அடையாளங்களையும் பார்க்கிறார்கள். நபித்தோழர்களைப் போலவே, வல்லமையுள்ள இறைவனின் அடையாளங்களிலும் புதிய உதவியின் மூலமும் அவர்கள் ஒளியையும் இறைநம்பிக்கையையும் பெறுகின்றனர். நபித்தோழர்கள் அழுதது போல், அவர்களில் பலர் தொழுகையின்போது அழுகிறார்கள். ஸஜ்தா செய்யும் இடங்களைக் கண்ணீரால் நனைக்கிறார்கள். அவர்களில் பலர் உண்மையான கனவுகளைக் காண்கிறார்கள். மேலும் நபித்தோழர்கள் செய்வதைப் போல இறைவனின் இல்ஹாமை பெறுவதற்கான சிறப்பு அவர்களுக்கும் கிடைக்கிறது. நபித்தோழர்கள் முன்பு செலவிட்டதைப் போலவே இவர்களில் பலர் தங்கள் கடின உழைப்பால் சம்பாதித்த செல்வங்களை அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற வேண்டும் என்பதற்காகவே, தமது ஜமாத்திற்காக செலவிடுகிறார்கள். அவர்களில் பலரை மரணத்தை நினைவுகூர்ந்து, நபித்தோழர்களைப் போலவே, மென்மையான மற்றும் உண்மையான இறையச்சத்தின் பாதையில் நடப்பதை நீங்கள் காண்பீர்கள். அவர்கள் இறைவனைச் சார்ந்த ஒரு பிரிவினர் ஆவர். அவர்களை இறைவன் தானே கவனித்துக் கொள்கிறான். மேலும்

அவர்களின் இதயங்களை நாளுக்கு நாள் தூய்மைபடுத்தி வருகிறான். அவர்களின் நெஞ்சங்களை நம்பிக்கையின் ஞானத்தால் நிரப்புகிறான். மேலும் அவன் நபித்தோழர்களை ஈர்த்தது போல, விண்ணின் அடையாளங்களால் இவர்களையும் தம் பக்கம் ஈர்க்கிறான். சுருக்கமாகச் சொன்னால், 'ஆகரீன மின்ஹும்' என்ற வார்த்தையால் குறிக்கப்படும் அனைத்து அறிகுறிகளும் இந்தப் பிரிவில் காணப்படுகின்றன. மேலும் வல்லமையுள்ள இறைவனின் வார்த்தை ஒருநாள் நிறைவேறும் என்பது உறுதியாக இருந்தது. அது நிறைவேறியுள்ளது. (அய்யாமுஸ் ஸுல்ஹ்)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ், இமாம் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் முழுமையான பிரதிபலிப்பாக விளங்குகிறார்கள் என்பதற்கான பொருளை விளக்கியவாறு 'ஆகரீன மின்ஹும்' என்பதன் பொருளை விளக்குகிறார்கள்:

ஸஹாபா (ரலி) அவர்களைத் தவிர, நம்முடைய தூய்மையான மற்றும் முழுமையான அடியார்கள், இறுதி நாட்களில் பெரிய எண்ணிக்கையில் தோன்றுவார்கள். மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்கு தர்பிய்யத் அளித்தது போல, இவர்களுக்கும் ஆன்மிக தர்பிய்யத் அளிப்பார்கள். அதாவது, வெளிப்புற நன்மைகள் மற்றும் ஆன்மிக பயனடையும் தொடர்பு துண்டிக்கப்படும், இஸ்லாமிய மார்க்கம் பல தவறுகளாலும் பித்அத்களாலும் நிரம்பி விடும், மேலும் ஆன்மிகவாதிகளின் உள்ளங்களி-லிருந்தும் ஒளி மறைந்து போகும் ஒரு காலத்தில் அந்த மக்கள் தோன்றுவார்கள். பின்னர் எல்லாம் வல்ல இறைவன் ஒரு நற்பாக்கியம் பெற்ற ஆன்மாவை வெளிப்புற தொடர்புகளின் ஊடகமின்றி, புனித நபி (ஸல்) அவர்களின் நேரடி ஆன்மிக தர்பிய்யத்தின் மூலம் மட்டுமே ஆன்மிகத்தின் முழுமைத்துவத்திற்கு இட்டுச் செல்வான். மேலும் அதை ஒரு பெரிய கூட்டமாக ஆக்குவான். மேலும் அந்தக் கூட்டம் நபித்தோழர்களுடன் மிகவும் வலுவான ஒற்றுமையைக் கொண்டிருக்கும். ஏனென்றால் அந்த முழுமை அனைத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வளர்ப்பாகும். அவர்களின் நன்மைகளும் அருள்களும் அவர்களில் தொடரும். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம்)




இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகத்தான அந்தஸ்து என்னவென்றால், சிரமங்கள் மற்றும் எதிர்ப்புகள் மிகுந்த சூழ்நிலைகளிலும் கூட, இமாம் மஹ்தி (அலை) அவர்களைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஸலாத்தை அவருக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும் பைஅத் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

எனக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கும் இடையில் எந்த நபியோ அல்லது தூதரோ இருக்க மாட்டார்கள். கவனமாகக்கேளுங்கள்! அவர் என் உம்மத்தில் எனக்குப் பிறகு என் கலீஃபாவாக இருப்பார். பின்னர் கவனமாகக் கேளுங்கள்! அவர் தஜ்ஜாலை ஆன்மிக ரீதியாகக் கொல்வார். சிலுவையை அழிப்பார். அதாவது சிலுவை சார்ந்த கொள்கைக் கோட்பாடுகளை அழிப்பார். ஜிஸ்யாவை ஒழிப்பார். அதாவது மதப் போர்களை முடிவுக்குக் கொண்டு வருவார். மேலும் கவனமாகக் கேளுங்கள்! அவரை யார் கண்டாலும், அவருக்கு என் வாழ்த்துக்களை (ஸலாத்தை)த் தெரிவிக்கவும். அதே போல், எவ்வளவு கடினமான சூழ்நிலைகள் ஏற்பட்டாலும்கூட இமாம் மஹ்தியிடம் வந்து அவரிடம் பைஅத் செய்ய முஸ்லிம்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

மக்களே, நீங்கள் அவரைப் பற்றி அறிந்தவுடன், பனியில் மண்டியிட்டு நடக்க வேண்டியிருந்தாலும், அவரிடம் பைஅத் செய்யுங்கள். அதாவது, எவ்வளவு கடினமான மற்றும் விரோதமான சூழ்நிலைகள் இருந்தாலும், நீங்கள் அவரிடம் பைஅத் செய்யுங்கள். ஏனென்றால் அவர் அல்லாஹ்வின் கலீஃபா மஹ்தியாக இருப்பார். மேலே குறிப்பிடப்பட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுகள் இமாம் மஹ்தியின் நிலை மற்றும் அந்தஸ்தை சுட்டிக் காட்டுகின்றன: அவர் பொய்யின் சக்திகளை ஒழிப்பார். சிலுவை நம்பிக்கைகளை பொய் என்று நிரூபிப்பார். உலகில் மதப் போர்களை முடிவுக்குக் கொண்டு வருவார். அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவார். அவரிடம் பைஅத் செய்து, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்த்துகளை (ஸலாத்தை)த் தெரிவிப்பது கட்டாயமாகும். மேலும் அவர் அல்லாஹ்வின் பிரதிநிதி என்பதால் எனக்கும் அவருக்கும் இடையில் எந்த நபியோ அல்லது தூதரோ இருக்க மாட்டார்கள் என்றும் கூறினார்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இமாம் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் மார்ச் 23, 1889 அன்று முதல் பைஅத் வாங்கினார்கள். இந்த பைஅத் கடந்த நூற்று ஐம்பது ஆண்டுகளில் உலகின் இருநூறுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவி, வளர்ந்து செழித்து வருகிறது. முன்னதாக, இந்த பைஅத் உலகின் நாடுகள், கண்டங்கள், நகரங்கள் மற்றும் ஊர்களில் அஹ்மதிய்யா கலீஃபாக்கள் மற்றும் ஜமாஅத் முபல்லிக்குகள் மூலம் வாங்கப்பட்டது. இப்போது, இது காலத்தின் கலீஃபாவின் புனித கைகளால் செயற்கைக்கோள் மூலம் ஒரே நேரத்தில் எடுக்கப்படுகிறது. இது தொடர்பாக முன் சென்ற சான்றோர்களின் முன்னறிவிப்புகளும் உள்ளன. ஹஸ்ரத் ஷாஹ் ரஃபியுத்தீன் சாஹிப் தெஹ்லவி கியாமத் நாமா என்ற தமது நூலின் நான்காம் பக்கத்தில் எழுதுகிறார்கள்:

அதாவது, இந்த நிகழ்வின் அறிகுறி என்னவென்றால், இமாம் மஹ்தியின் காலத்தில், ரமலான் மாதத்தில், சூரிய மற்றும் சந்திர கிரகணம் ஏற்பட்டிருக்கும்போது, பைஅத்

உறுதிமொழியின்போது வானத்திலிருந்து இந்த வார்த்தை -களுடன் ஒரு குரல் கேட்கும்.

இவர் அல்லாஹ்வின் பிரதிநிதி மஹ்தி ஆவார். இவர் சொல்வதைக் கேட்டு கீழ்படியுங்கள். 1993 ஆம் ஆண்டு தொடங்கி 30 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் வருடாந்திர யு.கே. மாநாட்டின்போது இந்த உலகளாவிய பைஅத் உறுதிமொழி ஒவ்வோர் ஆண்டும் எடுக்கப்படுகிறது. மேலும் ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகிறார்கள். மேலும் ஒவ்வோர் ஆண்டும் இவர் அல்லாஹ்வின் கலீ.்.பா, மஹ்தி, இவருக்கு செவிசாய்த்து கீழ்ப்படியுங்கள் என்று குரல் கொடுக்கப்படுகிறது. இதுவே ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் இன்றைய காலகட்டத்தில் வகித்திருக்கும் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மகத்தான நிலை மற்றும் அந்தஸ்தாகும்.

“உண்மையைத் தேடுபவர்கள் உண்மையான நம்பிக்கை, உண்மையான ஆன்மிகத் தூய்மை, இறைவன் மீது அன்பு செலுத்தும் பாதை ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளவும், அசுத்தமான வழிமுறை, சோம்பேறித்தனமான மற்றும் துரோக வாழ்க்கையையும் கை விடவும் என்னிடம் பைஅத் செய்யுங்கள்” என்று தமக்கு கட்டளையிடப் -பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

இறைவன் கூறுகிறான்:

மற்ற எல்லா மார்க்கங்களையும் விட தனது மார்க்கத்தை மேலோங்கச் செய்வதற்காக, நேர்வழியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் தனது தூதரை அனுப்பிய இறைவன் அவனே. இந்த இல்ஹாமின் பொருள், வல்லமையுள்ள இறைவன் என் மூலம் இஸ்லாத்தை மற்ற எல்லா மார்க்கங்களையும் விட மேலோங்கச் செய்வதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன் என்று எனக்கு விளக்கப்பட்டது. இந்த இடத்தில் இது திருக்குர்ஆனில் உள்ள ஒரு மகத்தான முன்னறிவிப்பு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இது குறித்து அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கைகளால் நிறைவேறும் என்று ஒப்புக் கொள்கிறார்கள். எனவே, எனக்கு முன் எத்தனையோ புனிதர்களும் சான்றோர்களும் இறந்து விட்டார்கள். அவர்களில் யாரும் இந்த முன்னறிவிப்பு தங்களுக்குரியது என்று சான்றாக எடுத்துக் காட்டவில்லை. அல்லது மேற்கண்ட வசனம் எனக்கு ஆதரவாக அருளப்பட்டது என்றும் அவர்கள் கூறவில்லை. ஆனால் என்னுடைய காலம் வந்தபோது, இந்த வசனத்தின் உண்மைத்துவம் உமக்கு பொருந்துகிறது என்றும், உமது காலத்தில், மற்ற மதங்களை விட இஸ்லாத்தின் மேன்மை நிரூபிக்கப்படும் என்றும் எனக்கு இல்ஹாம் மூலம் சொல்லப்பட்டது. (தர்யாக்குல் குலூப் பக்கம் 47)

சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் மகத்தான நிலையும் அந்தஸ்தும் என்னவென்றால், அவர்கள் கலீ.்.பத்துல்லாஹ் என்பதும், இதன் அடிப்படையில், அவர்கள் அல்லாஹ்வின் நபி என்பதும் ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கும் இமாம் மஹ்திக்கும் இடையில் வேறு எந்த நபியும் இருக்க மாட்டார்.

ஒரு நபி பிறந்தாலே தவிர, அபூபக்ர் (ரலி) அவர்களே மக்களில் சிறந்தவர்.

அவர்களுக்குப் பிறகு, நபி (ஸல்) அவர்கள் கியாமத் நாள் வரை தொடரும் ஒரு கிலா.்.பத்தைப் பற்றிய நற்செய்தியை அறிவித்தார்கள். ஹஸ்ரத் ஹுதை.்.பா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ் நாடும் வரை நபித்துவம் உங்களிடையே இருக்கும். பின்னர் அதை அவன் எடுத்து விடுவான். பின்னர் நுபுவ்வத்தின் வழியில் கிலா.்.பத் நிலைநாட்டப்படும். பின்னர் அல்லாஹ் அதையும் எடுத்து விடுவான். பின்னர் மன்னராட்சியின் சகாப்தம் வரும். அல்லாஹ் நாடும் வரை அது நீடிக்கும். பின்னர் அல்லாஹ் அதையும் எடுத்து விடுவான். பின்னர் நபித்துவப் பாதையில் கிலா.்.பத் ஏற்படும். இதைச் சொல்லி விட்டு அவர்கள் அமைதியாகி விட்டார்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியை (கலீ.்.பாவை) நீங்கள் கண்டால், உங்கள் உடல் கிழிக்கப்பட்டாலும், உங்கள் செல்வங்கள் பறிக்கப்பட்டாலும், அவரை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். (முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் ஹதீஸ் எண் 22916)



இன்று, இந்த கலீ.்.பத்துல்லாஹ் தோன்றியுள்ளார். அவருடைய நிலை மற்றும் அந்தஸ்து இந்த சுருக்கமான உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று, இந்த கலீ.்.பத்துல்லாஹ்வின் ஆன்மிக வாரிசு மூலம், இஸ்லாத்தின் ஒளி உலகின் 220 நாடுகளுக்கு மேல் பரவியுள்ளது. இன்னும் அல்லாஹ்வின் அருளால் அது நாளுக்கு நாள் பரவி வருகிறது.

ஹஸ்ரத் அமீருல் மு.்.மினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: “நீங்கள் முன்னேற வேண்டுமென்றால், உலகை வெல்ல விரும்பினால், எனது அறிவுரை என்னவென்றால், நீங்கள் கிலா.்.பத்துடன் இணைந்திருக்க வேண்டும். அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். நமது அனைத்து முன்னேற்றமும் கிலா.்.பத்தின் மீதான நமது பற்றுதலைப் பொறுத்ததுதான் என்பதே எனது தூதுச் செய்தி. (பத்ர் 18.12.2008)

மேலும் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: "இன்று உலகம் பெரும் கொந்தளிப்பில் உள்ளது. முஸ்லிம்கள் முஸ்லிம்களிடமிருந்து வெகுதொலைவில் உள்ளனர். பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் வெறுப்பிற்கு இலக்காகிறார்கள். ஒரே கலிமாவை ஓதுபவர்கள் ஒரே நபிக்குச் சொந்தமானவர்கள் என்றும் தம்மை சொல்லிக் கொண்டு, ஒருவருக்கொருவர் எதிரான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். திர்க்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் பொக்கிஷங்கள் இருந்த போதிலும், இன்று முஸ்லிம்கள் ஒரே கையில் ஒன்று திரள வேண்டும் என்று இறைவன் நியமித்த தலைமையின் அங்கீகாரத்தை இழந்துள்ளனர்."

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் சேரவும், இறைவனின் அருளால் நிரந்தரமான கிலாஃபத் அமைப்புடன் தொடர்பு கொள்ளவும் உங்களுக்கு நல்வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பது உங்கள் அதிர்ஷ்டமாகும். காலத்தின் கலீஃபாவுடன் உங்களுக்கு எவ்வளவு தனிப்பட்ட தொடர்பு இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாக மார்க்க மற்றும் உலக அருள்களில் நீங்கள் பங்கு பெறுவீர்கள். உங்கள் உறவுகளும் மேம்படும். சமூகத்தில் அமைதியின் சூழ்நிலையும் நிலைபெறும். எனவே, இந்த நல்வாழ்வு மிகுந்த பாதுகாப்பு அரணிலிருந்து பயனடைய, நீங்கள் அனைவரும் கிலாஃபத்துடனான உங்கள் தொடர்பை வலுப்படுத்த வேண்டும். இஸ்லாத்தின் வெற்றிக்காகவும் உலக அமைதிக்காகவும் பிரார்த்தனை செய்ய வேண்டும். உங்கள் தரத்தை உயர்த் தவேண்டும். மேலும் கலீஃபாவின் உதவிக் கரங்களாகவும், காலத்தின் கலீஃபாவின் பேருதவியாளராகவும் மாற உங்கள் பொறுப்பாளர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். (பத்ர் 18.12.2008)

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**இறைவன் எனக்கு மீண்டும் மீண்டும் தெரிவித்துள்ளான். அதாவது அவன் எனக்கு மிகுந்த மகத்துவத்தை வழங்குவான். என் மீதுள்ள அன்பை உள்ளங்களில் அமரச் செய்வான். எனது இயக்கத்தை முழு பூமியிலும் பரவும்படி செய்வான். எல்லா பிரிவுகளின் மீதும் எனது பிரிவை வெற்றி பெறச் செய்வான். எனது பிரிவைச் சார்ந்த மக்கள் அறிவிலும் இறை ஞானத்திலும் எந்த அளவு சிறப்பினை பெறுவர் என்றால் அவர்கள் தமது உண்மையின் ஒளி மற்றும் தங்களிடமுள்ள ஆதாரங்கள் மற்றும் அடையாளங்களின் அடிப்படையில் எல்லாரது வாயையும் அடைத்து விடுவர். மேலும் ஒவ்வொரு சமுதாயமும் இந்த நீரூற்றிலிருந்தே தண்ணீர் அருந்தும். மேலும் இந்த இயக்கம் வேகமாக வளரும்; மலரும். எதுவரையென்றால் பூமியில் முழுமையாகப் பரவி விடும்.**

*(தஜல்லியாத்தே இலாஹிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 407)*